# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஆகஸ்ட் 2004 ஜீவியம் 10 மலர் 4**

இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *எங்கள் குடும்பம்* | 3 |
| *அன்பர் கடிதம்* | 47 |
| *லைப் டிவைன்* | 48 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

## இம்மாதச் செய்தி

# கேள்வி கேட்க முடியாத மனநிலை யோகத்திற்குரியது.



## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கணவர் : எல்லாம் சத்தியத்தில் அடங்குகிறது.

தாயார் : சத்தியத்தை விடாமல் பிடித்துக்கொண்டால், உறவு, நட்பால் சிரமம் வாராது. தானே விலகும்.

கணவர் : நீ சொல்லும் பதில் எல்லாம் சமர்ப்பணம் சுலபமாகத் தெரிகிறது.

தாயார் : சுலபம் என்று ஒன்றை நாடினால், பலன் பெரியதாக இருக்காது. சமர்ப்பணம் மிகவும் கடினமானது.

கணவர் : ஏன்?

தாயார் : மனிதன் இறைவனாகும் முறை அது என்பதால் கடினமானது.

கணவர் : கடினத்தைச் சொல் கேட்போம்.

தாயார் : போன் மணியடித்தவுடன் சமர்ப்பணம் நினைவு வாராது, பேசுவோம்.

கணவர் : நான் பார்த்திருக்கிறேன். அதை என்ன செய்வது?

தாயார் : நாம் செயல்படத் தயாராக இருக்கிறோம். நினைக்கவோ, உணரவோ, சமர்ப்பணம் செய்யவோ தயாராக இல்லை.

கணவர் : மேலும் விளக்கம் தேவை.

தாயார் : இரவில், தோட்டத்தில் சத்தம் கேட்டால், முதலில் என்ன தோன்றுகிறது?

கணவர் : பயம்.

தாயார் : நினைவு என வந்தால், என்ன வருகிறது?

கணவர் : போலீஸ், பக்கத்து வீட்டு உதவி நினைவு வருகிறது.

தாயார் : அன்னை நினைவு வருகிறதா?

கணவர் : கற்பனையாகப் பேசும்பொழுதே நினைவு வரவில்லை.

தாயார் : நாம் மனத்தாலான மனிதன் என்றாலும், செயலளவில், நடைமுறையில் உடலால் வாழ்கிறோம். தாகம் எடுத்தால் தண்ணீர் குடிப்பதைப்போல், மேலே ஏதாவது விழுந்தால் உதறுவதுபோல், உடல் செயல்படத் தயாராகக் காத்துள்ளது.

கணவர் : நினைவு?

தாயார் : நினைவெல்லாம் உடலில் உற்பத்தியாகின்றது.

கணவர் : சமர்ப்பணத்தில் வேறு விவரங்களுண்டா?

தாயார் : நினைவு என வந்தவுடன் அதை விலக்கினால் உணர்வு வரும். அதை விலக்கினால் உடல் உணர்வு வரும். அதையும் விலக்கினால் ஜீவனின் நோக்கம் தெரியும். அது சுயநலமாக இருக்கும். அதைச் சமர்ப்பணம் செய்ய மனம் வாராது. வந்தால் சமர்ப்பணம் அன்னைக்கு உரியதாகும்.

கணவர் : பார்ட்னரைப் பார்த்தவுடன் பாங்க் விஷயம் என்னாயிற்று எனக் கேட்பதற்குப் பதிலாக அன்னையை மட்டுமே நினைக்கவேண்டும்.

தாயார் : நினைவு, உணர்வு, உடலுணர்வு, ஜீவனுடைய நோக்கம், இடைப்பட்டிருப்பதால் இவற்றைக் கடந்து



செல்வது முக்கியம், சிரமம். நினைவைக் கடந்தால் உலகில் எவருடைய மனமும் நமக்குத் தெரியும்.

கணவர் : அது ஞானிகட்கேயில்லாத சித்தியாயிற்றே.

தாயார் : அதுபோல் 4 கட்டங்களிருப்பதால், சமர்ப்பணம் கடினம். Legend of Brahman என்ற கதையில் பிரம்மத்தைச் சித்தித்தவர் அனைவருக்கும் பிரம்மானுபவத்தைக் கொடுக்கிறார்.

கணவர் : பிரம்மம் என்னவாகச் சித்திக்கிறது?

தாயார் : மௌனமாகச் சித்திக்கின்றது. தியானம், நிஷ்டை, ஜபத்திற்குப் பதிலாக தத்துவ விசாரணை, சப்தம், இயற்கையுடன் ஒன்றியிருப்பது ஆகியவை இக்கதையில் பயன்படுகின்றன.

கணவர் : பிரம்மம் அற்புதமாகச் சித்திக்கவில்லையா?

தாயார் : மௌனமாகச் சித்திப்பதையே நோக்கமாகக்கொண்ட கதையிது. எங்கும் உள்ள பிரம்மம் எங்குமில்லாதது என்ற கருத்தில் வகுப்பு ஆரம்பிக்கிறது.

கணவர் : அது முரண்பாடு.

தாயார் : அதை உடன்பாடாக ஏற்பவருக்கு மனம் மௌனத்தைத் தொடுகிறது.

கணவர் : ஏற்றால் மௌனம் வருமா?

தாயார் : இளம்பிள்ளைகள் என்பதால் அவர்கள் மனத்தை ஆழ்ந்து தொடுமன்றோ! பலர் மௌனத்தை ஏற்று ரசிக்கிறார்கள். சிலர் பயப்படுகிறார்கள்.

கணவர் : ஏன்?

தாயார் : மௌனத்தை மந்தமாக நினைப்பதால் பயம் வருகிறது. அதைக் கடந்தவருக்கே மௌனம் உரியது. தொடர்ந்து உயர்ந்த நிலைகளில் மௌனத்தை விரும்புகிறவர், கதையில், ஓர் இளைஞன். அவனுக்கு, காடு, மலை போன்ற இடங்கள், ஏற்கனவே சித்தி பெற்ற பெண்மணி ஒருத்தி, ஆகியவற்றால் மௌனம் ஆழ்ந்து நிலைக்கிறது. பிரம்ம ஞானம் பிரம்ம மௌனம் முடிவானது. அதைப் பெற அந்த சித்தி பெற்றவரைத் தன்னையறியாமல் நாடுகிறான். அவர்கள் ஒரு மாதம் மௌனமாக இமயமலையில் சந்தித்து அவன் பிரம்ம விழிப்புப் பெறுகிறான். பின் பிரம்மம் மௌனமாகச் சித்திக்கிறது. உலகம் அதை ஏற்றுப் போற்றிப் பெற விழைவதால், ஒரு பெருங்கூட்டத்தில் - 45 ஆயிரம் பேர் - அனைவரும் கைகளைக் கோத்துக்கொண்டு 5 நிமிஷம் பிரம்மானுபவம் பெற்று, 2 மணி நேரம் அசைவற்றிருந்து அமைதியாகக் கலைகின்றனர்.

கணவர் : நமக்கு?

தாயார் : சமர்ப்பணத்திற்கு அடிப்படை பிரம்ம மௌனம்.

கணவர் : அன்னை என்பது கோயிலுக்குப் போய் தேங்காய் உடைப்பதில்லை போலிருக்கிறதே.

தாயார் : அது வழிபாடு, ஆன்மீகமாகாது.

கணவர் : ஏன் கை கோத்துக்கொள்ளவேண்டும்?

தாயார் : அதுவுமில்லாமல் பிரம்மம் பரவவேண்டும். அது சிரமம். கைப்பட்டால் எளிதாகப் பரவும்.

கணவர் : கைப்பட்டுப் பரவுவது பிரம்மமாக இருக்குமா?



தாயார் : பிரம்மம் (vital) தொடு உணர்வால் பரவும்.

கணவர் : பலன் பெற தொடு உணர்ச்சி போதும்.

தாயார் : சப்தம் உள்ளிருந்து எழவேண்டும். உள்ளிருந்து ஒரு கதிர் எழுந்து உலகில் உலவி அனைவரையும், இந்தக் கருவிகள் - தொடுவது, மணியடிப்பது - இல்லாமல் தொடவேண்டும்.

கணவர் : அது சூட்சுமம்.

தாயார் : சூட்சுமம் அல்லது காரணம்.

வீட்டில் உள்ள அனைவரும் தங்களை உள்ளும், புறமும் ஒழுங்கு செய்ய (organise) ஒத்துக்கொண்டு cleanliness, orderliness, soft speech, பிறர் நோக்கில் காண்பது, கடந்த காலச் சமர்ப்பணம், சமர்ப்பணம் என எல்லா அன்னையின் சட்டங்களையும் முழுவதும் பின்பற்ற முயன்றதில் ஒரு சில மாதங்களில் கிண்டல், கேலி, குத்தலாகப் பேசுவது, போன்ற குறைகள் பெரும்பாலும் விலக்கப்பட்டன. அனைவரும் நடப்பனவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து அன்னைக் கோணத்தில் புரிந்துகொள்ள முயன்றனர். வீட்டின் புறச்சூழல் மாறிவிட்டது. அகம் அந்த அளவுக்கு மாறவில்லை. படபடப்புக் குறைந்து பொதுவாக நிதானம் அதிகரித்தது. கம்பெனியும் அதேபோல் இருந்தது. பார்ட்னருடைய புதுப்போக்கு அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது. வீட்டிற்குப் பெரிய மனிதர்கள் வருவதும், பெரிய இடங்களுக்கு அழைப்பு வருவதும் தொடர்ந்தது. இந்தச் சமயம் கல்லூரியில் நடந்த ஒரு சம்பவம் அனைவரையும் திடுக்கிடச் செய்தது. ஹாஸ்டலில் ஒரு நண்பனைப் பார்க்க சிறியவன் போயிருக்கிறான். அவன் ரூமில் 2000/- ரூபாய் பணம் தொலைந்துவிட்டது. அவன் போலீஸுக்குச் செய்தி அனுப்பியபொழுது, அந்த நேரம் சிறியவன் அங்கிருந்ததால், போலீஸ் அவனைச் சந்தேகப்படுகிறது. நண்பன் எவ்வளவு மறுத்தாலும் போலீஸ் ஏற்பதாக இல்லை. எந்த நேரமும் இவனைத் தேடி வருவார்கள் என்பது செய்தி.

வீடு பீதியால் பீடிக்கப்பட்டது. பையன் அழுகிறான். "என்னை அன்னை கைவிட்டுவிட்டார்கள்" என அழுகிறான். கேஸ் என்று வந்தால் கேஸ் நடத்தலாம். உண்மை என்றும் வெல்லும். அனைவரும் தாயாரைப் பேசச் சொன்னார்கள்.

**வீட்டில் யார் மனதில் திருட்டு எண்ணமிருந்தாலும்**
**அது இந்த நிகழ்ச்சியாக மாறியிருக்கும்**

என்றார். அனைவரும் திகைக்கின்றனர். எண்ணம் அந்த அளவு பாதிக்குமா? என்ற கேள்வி வருகிறது. விவாதம் அப்புறம். பையன் லாக்கப்பிற்குப் போகாமலிருக்க வேண்டுமானால் எண்ணம் மாறவேண்டும் என்பதை அனைவரும் ஏற்றனர்.

கணவர் : கம்பெனி நடக்க ஆரம்பித்தால் என் கைக்குப் பணம் உபரியாக வரும். கணக்கில் காட்டவேண்டாம் என நினைத்தேன்.

தாயார் : எண்ணத்தை மனதில் மாற்றமுடியுமா?

கணவர் பூஜை அறைக்குப் போனார். போலீஸ் கான்ஸ்டபிள் வேலு வந்தான். இவன் குடும்பத்திற்கு அறிமுகமானவன். அவனைக் கண்டு அனைவரும் தலை குனிந்தனர். "குற்றம் நம் பையன் மீதில்லை என்று சொல்ல வந்தேன்" என்றான். வேறு விபரம் சொல்லாமல் உடனே போய்விட்டான்.

பெரியவன் : அப்பாவை எழுப்பிச் சொல்லுங்க, அம்மா.

பெண் : அவரே எழுந்து வரட்டும், பொறு.

பெரியவன் : வேலுவைப் பார்த்ததும் வெட்கமாயிற்று.

தாயார் : அவன் நல்லவன். அவன் மூலமாகக் கெட்ட செய்தி வாராது.

சிறியவன் : என்னை அன்னை காப்பாற்றிவிட்டார், தப்பித்துக் கொண்டேன்.



பெண் : தப்பே செய்யவில்லையே, எப்படித் தப்பிப்பது?

சிறியவன் : நான் திருடவில்லை, ஆனால் திருட நினைத்தேன்.

தாயார் : அது என்ன?

சிறியவன் : என் நண்பன் செலவுக்கு 2000/- ரூபாய் வைத்திருப்பதாகச் சொன்னான். எனக்கு அப்படிப் பணமில்லையே, உங்கள் அலமாரியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என நினைத்தேன். அதற்கா இவ்வளவு பெரிய தண்டனை?

பெரியவன் : எப்படி, தம்பி தப்பித்தான்? ஹாஸ்டலில் என்ன நடந்தது? என்று சொல்லாமலேயே வேலு போய்விட்டான். நான் போய்த் தெரிந்துவருகிறேன்.

கணவர் : என்ன விஷயம்?

பெண் : பழி விலகியது. வேலு வந்து சொன்னான்.

கணவர் : ஓர் ஆட்டம் ஆடிவிட்டது. அரெஸ்டாயிருந்தால் அசிங்கம்.

தாயார் : ஏன் வந்தது, எப்படிப் போயிற்று என்றறிவது முக்கியம், பலன் தரும்.

கணவர் : மனம் அசுத்தமாகயிருந்ததால் வந்தது, அருளால் போயிற்று.

தாயார் : நாம் அதை உணருவதும், 5 ஊர்களில் பெரிய ஆஸ்பத்திரி கட்டுவதும் சமம்.

கணவர் : 5 ஊர்களில் ஆஸ்பத்திரி கட்டியவர் பிறருக்கோ, தாய் ஸ்தாபனத்திற்கோ, உறவுக்கோ, உதவ முயலவில்லை. பிறரைத் தம்மைப்போல் தயார் செய்ய முயலவில்லை. தானே செய்தார், பிறரைச் செய்யச் சொல்லவில்லை.

தாயார் : எட்ட இருந்தால், அன்னை அபரிமிதமாகப் பலிக்கிறார் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

கணவர் : உலகம் தன்னளவு ஒருவரில் முன்னேறும் என்று இங்குக் காண்கிறோம். உலகமே ஒன்றுகூடி ஒருவரை முன்னுக்குக் கொண்டுவர முயன்றதுபோல் 5 பெரிய ஆஸ்பத்திரிகளை ஒருவர் நிறுவியுள்ளார்.

தாயார் : அது ஸ்தாபனம் செய்வது (management). அந்த ஆஸ்பத்திரிகளில் சுத்தம் அபரிமிதமாக இருக்கும். அது ஒரு முக்கியக் காரணம். அன்னை இங்கு அபரிமிதமாகச் செயல்பட்டதற்கு இந்த மூன்று காரணங்கள் முக்கியம்.

1. **திட்டம் தோற்கும் வகைகளை விலக்கியது.**
   - ✡ **உதவியை இரண்டாம்பட்சமாக்கியது.**
   - ✡ **தாமே செய்ய முன்வந்தது.**
   - ✡ **பொறாமைக்காரருக்குப் பிடிகொடுக்காதது.**
2. **ஸ்தாபன முறைகளைக் கடைப்பிடித்தது.**
3. **அளவுகடந்த சுத்தம்.**

கணவர் : நாம் இந்த மூன்றையும் பின்பற்றக் கூடாதா?

தாயார் : அவசியம் செய்யவேண்டும். மனம் இந்தப் பெரிய சாதனையைவிடப் பெரியது. மனம் அன்னையை ஏற்றால், சரணாகதியை ஏற்றால், அல்லது அன்னை கோட்பாடுகளை ஏற்றால், அவை மேற்சொன்னவற்றை விடப் பெரியது. மனம் உலகத்தைத் தன்னுட்கொண்டது. அதை நாம் வெல்லுதல் முடியும், அவசியம்.

கணவர் : எப்படி ஆரம்பிப்பது?



தாயார் : இந்த எண்ணத்தை ஏற்க முடியுமா? புரிந்து மனம் ஏற்குமா? ஏற்பது அவசியம், ஏற்றால் பலிக்கும் என மனம் அறியுமா?

கணவர் : மனம் என்றால் என்னவென்று தெரியாதபொழுது இவற்றையெல்லாம் எப்படிச் செய்வது?

தாயார் : கடந்த ஓரிரு ஆண்டுகளாக நடப்பது எப்படி எனப் புரிகிறதன்றோ?

கணவர் : Mother's Grace எனக் கொள்கிறோம்.

தாயார் : மதர் அருள் செயல்பட நம் மனம் இடம் கொடுத்தது தெரிகிறதா?

கணவர் : அதைச் சொல்கிறாயா? எனக்கு மனம் இடம் கொடுக்காதது தெரிகிறது.

தாயார் : மனம் இடங்கொடுக்காதது தெரிவதும், இடம் கொடுப்பது தெரிவதும் ஒன்றே. இரண்டும் மனத்தை அறிவதே. மனம் புரிந்துகொண்டவை நடந்தது, புரிந்ததால் நடந்தது அன்றோ?

கணவர் : அது தெரிகிறது.

தாயார் : மனம் புரிந்துகொள்வது, மனம் விஷயத்தைப் புரிந்துகொள்வது, மனம் அன்னையைப் புரிந்து கொள்வது, மனம் விஷயத்தை அன்னைமூலம் புரிந்துகொள்பவை அடுத்த, அடுத்த கட்டங்கள் அல்லவா?

கணவர் : இது விளங்குகிறது.

தாயார் : புரிந்துகொள்வதால் நடப்பதைவிட புரிந்து கொள்ளாததால் நடக்கவில்லை என்ற தெளிவு பெரியது.

கணவர் : ஆமாம், அது முக்கியம். இப்போ நான் என்ன செய்ய வேண்டும் என்று தெரிகிறது. 'உள்ளே' நிறைய வேலை இருக்கிறது. பார்ட்னர் இதைப் பெரிதும் விரும்புவார்.

தாயார் : கம்பெனி வேலைகளை இப்பொழுது எப்படிச் செய்கிறோம்? அன்னை முறைப்படி எப்படிச் செய்ய வேண்டும்? என மனதால் தயார் செய்யவேண்டும். அதற்கு மனம் ஒத்துக்கொண்டால், மனம் தயாராகும்.

கணவர் : விஷயமே மனத்தில்தானிருக்கிறது. சர்க்கார் எடுத்துக்கொண்ட 1½ ஏக்கர் நிலத்தை மீண்டும் அருளால் பெற்றது எனக்கு நினைவிருக்கிறது. பிற்காலத்தில் 47,000 ரூபாய்க்கு விற்ற மனையை எடுத்துக்கொண்டு சர்க்கார் 2,350/- ரூபாய் கொடுக்க முன்வந்தது பரிதாபமன்றோ?

தாயார் : அது கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசு, கைவிட்டுப் போகாது. அதனால் அன்னை எளிதில் காப்பாற்றினார்.

கணவர் : அப்படியிருக்கும்பொழுது எப்படிக் கைவிட்டுப் போயிற்று?

தாயார் : மனம்.

கணவர் : என்ன விஷயம்?

தாயார் : நண்பருக்கு நிலம் பேரம் பேசி வாங்கிக் கொடுக்கும் நேரம் அந்த நிலத்தில் பாதியை தமக்குக் கேட்டார்.

கணவர் : இனாமாகக் கேட்டாரா?

தாயார் : நண்பரையே வாங்கிக் கொடுக்கும்படிக் கேட்டார்.



கணவர் : அப்படியும் மனிதர்கள் கேட்பார்களா? நண்பர் என்ன சொன்னார்?

தாயார் : பாதிக்குப் பதிலாக 1/3 பாகம் தர நண்பர் சம்மதித்தார்.

கணவர் : இவர் ஏற்றாரா?

தாயார் : இல்லை.

கணவர் : அதனால்தான் இவர் பொருள் திரும்பிவந்ததா? மனம் பிறர் பொருளை நாடியதால், இவருடைய பொருளுக்கு ஆபத்து வந்ததா?

தாயார் : யார் பொருளை அபகரிக்க இவர் முயன்றாரோ, அவரே வந்து இவர் பொருளைக் காப்பாற்றினார்.

கணவர் : உதவி உபத்திரமாவதற்கு வேறு உதாரணம் வேண்டாம். நினைவே பலிக்கிறது என்பதற்கும் இது பெரிய உதாரணம்.

தாயார் : விஷயம் எவ்வளவு பெரியதானாலும் மனம் மாறினால் காரியம் முடியும்.

கணவர் : ஈராக் போரை அப்படி நிறுத்த முடியுமா?

தாயார் : முடியும். அமெரிக்கா மனம் மாறினால் போரிருக்காது.

கணவர் : ஏன்?

தாயார் : ஈராக் அடாவடி செய்வது அனைத்தும் அமெரிக்கா (diplomacy) செய்வதுதானே. பலமுள்ள இடம் அடாவடி செய்வது எல்லா நாடுகளும் செய்வதுதானே. காஷ்மீர் பிரச்சினையானது பிரிட்டனும், அமெரிக்காவும் பாக்கிஸ்தானுக்குத் துணை போனதால்தானே. ரஷ்யா ரத்து அதிகாரத்தைச்

செலுத்தாவிட்டால் காஷ்மீர் நம் கையை விட்டுப்போயிருக்கும்.

கணவர் : பிணக்கில் இருவரும் தவறு என்பது அன்னைச் சட்டம்.

தாயார் : எதிரி சக்திகள் நம்மை அழிக்க முடியும்வரை நிச்சயமாக அழிக்கும். முடியாது எனத் தெரிந்தால் நம் ஸ்தாபனத்துள் வந்து நம்முடனிருந்து உள்ளிருந்து நம் வேலையைக் கெடுக்கும். அவற்றை evil persona தீயவன் என பகவான் கூறுகிறார். நம்முள் உள்ள அத்தீயவனைக் கண்டு அவனைச் சரணம் செய்வது சரணாகதி. நாம் அவற்றைத் தவறான குணமெனக் கூறுகிறோம்.

கணவர் : கேலி, குத்தலாகப் பேசுவது, அதுவா?

தாயார் : அவை எழும்பொழுது க்ஷணத்தில் காரியம் கெட்டு விடும். அதேபோல் அருள் எழும்பொழுது க்ஷணத்தில் காரியம் முடியும். அந்த இடங்களில் இயல்பாக உள்ள உண்மையை sincerity என்கிறார் அன்னை.

கணவர் : நமக்குப் புரியவில்லை என அந்த நேரம் கூறுவது insincerity. நான் உன் காரியத்தை அழிக்க வந்துள்ளேன் எனக் கூறுவதாகும். அவர்களிடம் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

தாயார் : நாமே அவர்.

கணவர் : பயமாயிருக்கிறது.

தாயார் : நம்மைச் சுற்றியுள்ளவர்கள், நாம் அடிக்கடிச் சந்திப்பவர்களிடம் உள்ள அத்தனைக் குணங்களும்



நம்முடைய பிரதிபலிப்பு என எடுத்துக்கொள்ள முடியுமா?

கணவர் : அப்படியானால் நான் பெரிய லிஸ்ட் தரமுடியும். அப்படிச் சொல்ல முடியுமா?

தாயார் : அதுவே உண்மை.

கணவர் : சரி, செய்கிறேன். நல்லதை முதலில் சொல்கிறேனே.

- **இனிமையாக மட்டும் பேசுவது.**
- **எவர்க்கும் உதவி செய்வது.**
- **செய்வதைத் திறமையாகச் செய்வது.**

தாயார் : இது உலகில் உள்ள அனைத்தையும் கூறும்படி அமையும்.

கணவர் : எப்படிச் சொல்ல?

தாயார் : நம்முள் இருப்பதாக நாம் காணும் எந்தச் சிறிய தவறும் பிறரில் கண்டால் அதை மட்டும் கூறவேண்டும்.

கணவர் : நல்லது வேண்டாமா?

தாயார் : கெட்டதை விலக்குவது முக்கியம்.

கணவர் : சரி, அப்படிச் சொல்கிறேன்.

- **நல்ல சொல் 10 சொன்னபின், மனம் புண்படும்படி ஒரு சொல் சொல்லி எல்லாவற்றையும் கெடுப்பது.**
- **எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் பல ஆண்டுகள் வேலை செய்தபின் முடிவில் ஒரு சிறு பலனை எதிர்பார்த்துக் கெட்ட பெயர் வாங்குவது.**

- ✪ நம்மைச் சுற்றி நடப்பதை அறியாதது.
- ✪ எதிரியை நண்பனாக நினைப்பது.
- ✪ பிறர் நம்மை மட்டமாக நினைப்பதை அறியாதது.
- ✪ நாமாகச் செய்யாத தவற்றைப் பிறர் தூண்டுதலால் செய்வது.
- ✪ அடுத்தவரை அவரிஷ்டப்படித் திருப்தி செய்ய முயல்வது.
- ✪ நடக்காததை நடத்த ஆசைப்படுவது.
- ✪ தராதரம் தெரியாமல் பழகுவது.
- ✪ பிறர் குறையை அறிய முடியாததால் சிரமப்படுவது.
- ✪ மனிதனுக்குப் பொறாமை, சுயநலம் உண்டு எனத் தெரியாதது.
- ✪ எவரும் பொய் சொல்வார் என அறியாதது.
- ✪ பிறரை மனிதராக, நல்லவராக, சமமாகக் கருதுவது.
- ✪ நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவரை நம்புவது.
- ✪ பிடியை விட்டுக்கொடுப்பது.
- ✪ மட்டமானவர்க்கு இடம் தருவது.

தாயார் : இவை பிள்ளைகளிடமிருந்தால், கண்டுபிடித்தால் நீக்க முடியும்.

மனம் பக்குவப்படவில்லை எனினும், பாக்டரியும், காரும் வந்ததாலும், பெரிய இடத்துச் சம்பந்தங்கள் ஏராளமாக வந்தபடியிருப்பதாலும், முக்கியமாகக் கணவரும், மற்றபடி பிள்ளைகளும் எல்லா வகையான புறக்கட்டுப்பாடுகளையும், மனக்கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டனர். அதன் பலனாக,

- ✧ வீட்டில் அசம்பாவிதமாக எவரும் பேசுவதில்லை.



- ✧ சுத்தம் தொடர்ந்து உயர்ந்தபடியிருக்கிறது.
- ✧ எவர் வீட்டினுள் நுழைந்தாலும் மலர்ந்த முகத்துடன் வருகிறார்கள்.
- ✧ டெலிபோன் மணியடித்தால் ஓடிப்போய் எடுக்கிறார்கள்.
- ✧ வந்தவர்களைச் சாப்பிடாமல் அனுப்புவதில்லை.
- ✧ யார் வந்தாலும், அனைவரும் அவரவரளவில் விசாரிக்கிறார்கள்.
- ✧ வருபவர் அனைவரும் தங்கள் வீட்டிற்கு வரும்படி வீட்டில் உள்ளவர்களை அழைக்கிறார்கள்.
- ✧ இதுவரை இருந்த சில்லறைப் பிரச்சினைகள் தாமே மறைந்துவிட்டன.
- ✧ டாக்டரிடம் போவது குறைந்தது, மறைந்தது எனலாம்.
- ✧ ஊதுவத்தி ஏற்றாவிட்டாலும், வீடு முழுவதும் வத்தி மணமிருக்கிறது.
- ✧ எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஏதாவது சிறிய, பெரிய வாய்ப்புகள் வந்தபடியிருக்கின்றன.
- ✧ பார்ட்னர் வருந்தோறும் ஒரு பெரிய செய்தியைச் சொல்லிவிட்டுப் போகிறார்.

இவையெல்லாம் ஒரு பெரிய காரியம் நடப்பதன் அறிகுறி எனத் தாயார் அறிவார். நடப்பது ஓரளவு பெரியதானால் வீட்டுச் சூழல் இடம் கொடுக்கும். அளவுகடந்து பெரியது நடந்தால், அந்த அளவுக்கு வீட்டு மக்கள் உடனே உயர்ந்து ஆதரவு தரமுடியுமா என்பது கேள்வி. எழவேண்டியது கேள்வியில்லை, சமர்ப்பணம் என மனம் சமாதானமாயிற்று. மனம் சமாதானமானாலும் அதற்குரிய அமைதி எழவில்லை. இவை பெரிய காரியங்கள் என்பதால், வேண்டாம் என ஒரு நினைவு எழுந்தாலும் காரியம் முழுவதும் கெட்டுப் போகும். எழுந்த கேள்வியைச் சமர்ப்பணம் செய்வது எளிதன்று எனத் தீவிரமாக நினைத்தபொழுது பார்ட்னர் வந்தார்.

பார்ட்னர் : கவர்னர் கூப்பிட்டு அனுப்பியிருந்தார். நம் பாக்டரிக்கு எந்தவிதமான சர்க்கார் ஒத்தாசை வேண்டு-மென்றாலும் செய்கிறேன் என்றார்.

கணவர் : எப்படி கவர்னர் இதுபோல் பேசுகிறார்?

தாயார் : (பார்ட்னரை நோக்கி) கவர்னரிடம் என்ன சொன்னீர்கள்?

பார்ட்னர் : நன்றி கூறினேன். கவர்னர் இதுபோன்ற ஆதரவை முதல் வரிசையிலிருக்கும் முதலாளிகளுக்கே கொடுப்பார்.

கணவர் : கவர்னர் அவர்களை உதவி கேட்பார், கொடுக்கமாட்டார்.

தாயார் : அதுவே சரி. அதனுடைய ஆன்மீக அர்த்தம் புரிய வேண்டும்.

பார்ட்னர் : என்ன?

தாயார் : நாம் எது செய்தாலும் கூடிவரும் எனப் பொருள். “உனக்கு எது வேண்டுமானாலும் நான் செய்கிறேன்” என அன்னை கவர்னர்மூலம் கூறுகிறார்.

பார்ட்னர் : நான் என்ன செய்ய?

தாயார் : சமர்ப்பணத்தை மேற்கொள்ளவேண்டும்.

பார்ட்னர் : 500 கோடி கம்பெனிகள் நாணயமான பார்ட்னர்கள் தேடுவதாகவும், நம் பெயரை அவர்கட்குத் தரலாமா எனவும் கவர்னர் விசாரித்தார். என்னிடம் மூலதனம் இல்லையே என்றேன். தேவையில்லை என்றார். எனக்குப் புரியவில்லை.

கணவர் : எனக்கும் புரியவில்லை. நாம் அவர்கட்கு என்ன செய்ய முடியும் என கவர்னர் நினைக்கிறார்.



பார்ட்னர் : ஒரிருவர் நம் பெயரையே கவர்னரிடம் கூறியதாகச் சொன்னார்.

தாயார் : என்ன பதில் சொன்னீர்கள்?

பார்ட்னர் : ஒத்துக்கொண்டேன். கம்பெனியின் நாணயத்தைக் கணக்கிடும்பொழுது நல்ல பெயருக்கு மரியாதை உண்டு.

கணவர் : அது பணத்திற்குண்டு.

பார்ட்னர் : பிறகு பெரிய பதவியிலிருந்த ஆபீசர்கட்கு அந்த அந்தஸ்திருந்தது.

தாயார் : நாம் முதலிலிருந்து கம்பெனியின் பெயரை உயர்வு குறையாமல் வைத்திருக்கிறோம்.

கணவர் : அது கணக்கில் சேராது.

பார்ட்னர் : இதுவரை சேராது. இனி சேரும் போலிருக்கிறது. நம் கம்பெனி 7, 8 வருஷமானாலும், சிறிய அளவிலிருந்தாலும் - 5 கோடி அளவில் - அந்த அளவு கம்பெனிகள் செய்யும் தில்லுமுல்லுகளை நாம் செய்யவில்லை.

கணவர் : கறுப்புப் பண முதலை நாம் பல முறை மறுத்துவிட்டோம்.

பார்ட்னர் : இது எந்தக் காலத்திலும், எந்தக் கணக்கிலும் சேராது.

தாயார் : இப்பொழுது அன்னையால் சேருகிறது.

பார்ட்னர் : அன்னையால் சேர்வதுதான் சேருவது. இந்த அந்தஸ்தை நாம் எப்படிக் காப்பாற்றுவது?

கணவர் : நம் கம்பெனியை நல்லபடியாக நடத்தினால் போதும்.

தாயார் : அன்னை முறைப்படி நடத்தினால் போதும்.

பார்ட்னர் : பல்கலைக்கழகத்தில் என்ஜினீயரிங் மாணவர்களைச் சந்தித்துச் சொற்பொழிவாற்ற அழைத்துள்ளனர். பேப்பர் ரிப்போர்டர் வந்து என்னைப் பேட்டி கண்டான். பிரபலம் நம்மைத் தேடி வருகிறது என்பதை நான் அடிக்கடி கேட்டுள்ளேன். இப்பொழுதுதான் பார்க்கிறேன்.

தாயார் : ரேடியோ டைரக்டர் உபசாரமாக பேசச் சொன்னபின் மறந்துவிட்டார். பேப்பரில் பல போட்டோக்களுடன் வந்தபின் தாமே அழைத்துப் பேசச் சொன்னார் என்பது நடக்கக் கூடியதில்லை.

பார்ட்னர் : இப்பொழுது நமக்கு நடக்கிறது. பேப்பர் அன்பர்கள் கட்டுரையை வெளியிட்டால் அதிகப் பிரதிகள் விற்கின்றன என்பதை நான் சாதாரணமாக எடுத்துக் கொண்டேன். போட்டி பேப்பரைவிட 7 மடங்கு விற்கும் என நான் கருதவில்லை.

தாயார் : எதுவுமே நம்மால் நினைக்க முடியாதபடியே நடக்கும் என்பது மட்டும் நான் அறிவேன். நடக்கும் செய்திகள் நமக்கு மட்டும் தெரிவதில்லை.

கணவர் : தெரிந்தால் நமது அல்ப சந்தோஷம் அத்தனையையும் வீணாக்கும்.

தாயார் : அதிர்ஷ்டம் ஆயிரம் வழியாக வருவது அன்னை வாழ்வு. இந்த எலக்ட்ரிகல் கம்பெனியில் நடந்தது அதிர்ஷ்டம்.

கணவர் : யாரைச் சொல்கிறாய்?

தாயார் : கணபதி எலக்ட்ரிகல்ஸ்.

கணவர் : அவருக்குத் தொழில் கெட்டுப் போயிற்று.



பார்ட்னர் : இன்று நான் அந்த வழியாக வந்தேன். ஏதோ வேலை நடந்ததே.

கணவர் : அவருக்குக் கடனாகிவிட்டது. கம்பெனியை மூடிவிட்டார். கட்டிடத்தை வாடகைக்கு விடமுடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

தாயார் : அவருக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். அவருடைய அண்ணார் மகனுக்கு தோலெல்லாம் நீர் வடிவது அவருக்கு வேதனை. அது குணமாகவில்லை. அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்.

பார்ட்னர் : அது அவருடைய அண்ணார் மகனா? அவர் மகன் என நினைத்தேன். அன்னையைத் தெரியுமா அவருக்கு?

தாயார் : தோல் வியாதி, கனவில் அன்னை வந்து கடலில் குளிக்கச் சொல்லிப் போய்விட்டது. அதனால் நம்பிக்கை வந்து கட்டடத்தில் அன்னை படத்தை வைத்தார். புரோக்கர் கைவிரித்துவிட்டார், கேட்பாரில்லை. கேட்டால்தானே கிராக்கி செய்யலாம்.

பார்ட்னர் : வேலை நடக்கிறதே.

தாயார் : ஒரு பாங்க் வாடகைக்கு எடுத்துக்கொண்டது. பெரிய அட்வான்ஸ் கொடுத்தது. அவருக்கு முழு நம்பிக்கை வந்துவிட்டது. அதிர்ஷ்டம் ஆயிரம் வழியாக வரும். எந்த வழியாகவும் நம்பிக்கை வருவதில்லை.

பார்ட்னர் : நம்பிக்கை வருவதுதானே அதிர்ஷ்டம்.

தாயார் : தினமும் கேள்விப்படுகிறோம். யாருக்காவது, ஏதாவது நடந்தபடியிருக்கிறது. வயதாகிறது, மாப்பிள்ளை வரவில்லை.

கணவர் : தாயாரும், அக்காவும் எதிரியாக இருந்தால் மாப்பிள்ளை எப்படி அமையும்? பணமில்லை, வயதாகிவிட்டது, வீட்டில் அனைவரும் எதிரி, கல்யாணம் எப்படி நடக்கும்?

தாயார் : பிரபலமான சர்க்கார் வேலையிலிருப்பவர் தாமே வந்து ஏற்றுக்கொண்டது அதிர்ஷ்டமில்லையா? அதிர்ஷ்டத்திற்குக் குறைவில்லை. நம்பிக்கை வருவது இல்லை.

கணவர் : என்ன வித்தியாசம்?

தாயார் : பலனை மட்டும் கருதினால் நம்பிக்கை வாராது.

கணவர் : என்ன செய்யவேண்டும்?

தாயார் : நன்றியிருந்தால் நம்பிக்கை வரும்.

பார்ட்னர் : நம்பிக்கையிருந்தால் நன்றி வருமா, நன்றியால் நம்பிக்கை வருமா?

தாயார் : நன்றி நம்பிக்கையைவிடப் பெரியது.

பார்ட்னர் : எப்படி?

தாயார் : நம்பிக்கை ஆத்ம ஞானம். நன்றி உடலில் வளரும் ஆத்மவிழிப்பு.

கணவர் : நமக்கில்லையே, என்ன செய்வது?

தாயார் : இல்லை என்பதை உணர்வதே நல்லது. நன்றி மனிதனில் சமீபத்தில் பிறந்தது என்கிறார் அன்னை.

பார்ட்னர் : தேவதைகள் நடனமாடிய கதைதானே. வெண்மையான இளம் தேவதை சமீபத்தில் பிறந்தது என்பதுதானே.



தாயார் : நன்றி தேவதை தம்மை எவரும் அழைப்பதில்லை என்று கூறுகிறது.

கம்பெனியிலிருந்து சிமெண்ட் திருடு போனதாகச் செய்தி வந்தது. அனைவரும் மனம் ஒடிந்தனர்.

தாயார் : திருடு போகக்கூடாது.

கணவர் : போய்விட்டதே, என்ன செய்ய?

பார்ட்னர் : ஏன் போயிற்று என அறிந்து மாற்றினால் திரும்பக் கிடைக்குமா?

கணவர் : தத்துவம் வேறே. முதலில் அதைக் கண்டுபிடிப்போம். போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுப்போம். நான் போறேன்.

பார்ட்னர் : நீங்கள் போய்ப் புகார் எழுதிக் கொடுங்கள். (தாயாரைப் பார்த்து) ஏன் திருடு போயிற்று?

தாயார் : கவனக்குறைவு, அவநம்பிக்கை, நன்றியில்லாதது காரணம்.

பார்ட்னர் : நம்மிடம் எல்லாமிருக்கிறது. நான் பூஜை அறைக்குப் போகிறேன்.

வேலைக்கும் அன்னைக்கும் ஏதோ ஓரிடத்தில் சிறு தொடர்பிருக்கிறது. ஜீவனுள்ள தொடர்பில்லை என்பதால் ஏதாவது சிரமம் வந்தபடியிருக்கிறது என்று தாயார் கவலைப்பட்டார். வீட்டார் மனதில் பாக்டரியிருக்கிறது, அன்னையில்லை. பார்ட்னர் அன்னையை ஏற்க முயல்கிறார். போதாது என்பது நிலை. கம்பெனியிலிருந்து ஆள் வந்தான். சிமெண்ட் எப்படித் திருடு போயிற்று என்று விசாரித்தால் அவனுக்குத் தெரியவில்லை. திருடு போனதே தெரியவில்லை என்றால் நிலைமை மோசமாக இருக்கிறது என்று விசாரப்பட்டார் தாயார். கணவர் போலீஸில் புகார்

கொடுத்துவிட்டு வந்தார். பார்ட்னர் தியானம் முடிந்து எழுந்துவந்து கம்பெனிக்குப் போய் நடந்ததைக் காணவேண்டும் எனப் புறப்பட்டார். எப்படித் திருடு போனது அங்குள்ள ஆட்களுக்குத் தெரியாமற் போகும் என மனம் துவண்டு போனார். வேறோர் ஆள், வந்தவரை அழைத்துக்கொண்டு கம்பெனிக்குப் புறப்பட்டார். அவன் தாயாரிடம் வந்து ஏன் அனைவரும் கவலையாக இருக்கின்றனர் என விசாரித்தான். திருட்டைப் பற்றி அவனுக்குத் தெரியவில்லை என்பது தாயார் கவலை. "நான் 10 மூட்டை சிமெண்ட் எடுத்துப் போனேன். திருடு போனதாகத் தெரியவில்லையே" என்றான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பார்ட்னர் விசாரித்தார். யார் திருடு போன தகவல் கொண்டுவந்தார் என்று விசாரித்தால், இவன் 10 மூட்டை வேலைக்கு வேறு இடத்திற்கு எடுத்துப் போனதைத் திருடு என்று கூறியுள்ளார் எனத் தெரிந்தது. மனம் குறையை ஏற்றால் குறை குறையில்லை எனத் தெரியும் என்பது இதனால் நிரூபணமாயிற்று.

பெரியவன் : அப்பாவுடன் வேலை செய்பவர் - நாயுடு - ஒரு சின்ன விசேஷம் நடத்தினார். பெரிய ஏற்பாடுகளெல்லாம் செய்து இருந்தார். விருந்தினரை உபசரிக்கச் செய்த ஏற்பாடுகள் பெரியது. ஒரே ஒருவர் வந்தார். அது ஆபீசில் வேலை செய்பவரில்லை; தெரிந்தவர்.

தாயார் : அவர் யார் வீட்டு விசேஷத்திற்கும் போகமாட்டார். அவர்கள் எப்படி வருவார்கள்?

சிறியவன் : பயங்கரமான ஏற்பாடம்மா.

பெரியவன் : அவர்களை எல்லாம் உள்ளன்புடன் எதிர்பார்த்தார்.

தாயார் : இன்று அவர்கள் வருவது, அன்று அவர் போனதைப் பொருத்தது.

கணவர் : நாயுடு ஏமாந்துவிட்டார். அவருக்கு வழியுண்டா? நான் சொன்னால் கேட்பார்.



சிறியவன் : நாயுடு அப்பாவைப் பார்க்க வந்திருக்கிறார்.

நாயுடு : வெளியில் போகலாம் என அழைக்க வந்தேன்.

கணவர் : வேறு விசேஷம் உண்டா?

நாயுடு : விசேஷம் ஒன்றுமில்லை.

கணவர் : கவலைப்படவேண்டாம்.

நாயுடு : எதற்குக் கவலைப்படவேண்டும்?

வந்த நாயுடு போய்விட்டார். கணவர் அவருடன் வெளியே போகப் பிரியப்படவில்லை.

கணவர் : அவர் ஏதும் பிரச்சினை இருப்பதாக நினைக்கவில்லை.

தாயார் : அவர் தம் பிரச்சினையை உணரவில்லை, உணர்வதாகக் காட்டப் பிரியப்படவில்லை.

கணவர் : நாயுடு வேறு. அவர் பிரச்சினைக்குத் தீர்வுண்டா? இன்று அவர் மனம் மாறினால் நிலைமை மாறுமா?

தாயார் : மனம் மாறினால் விஷயம் மாறும்.

கணவர் : விசேஷம் கடந்துவிட்டதே.

தாயார் : பிரச்சினை மனிதனுக்குரியது, விசேஷம் சந்தர்ப்பம்.

கணவர் எழுந்து நாயுடுவைத் தேடிப் போனார். தனியே சந்தித்தபொழுது நாயுடு தம் கவலையை, குறையைக் கொட்டித் தீர்த்தார். கணவர் நிலைமை மாறும், அத்தனை பேரும் வருவார்கள் என்றும், இரகஸ்யம் இவர் மனதிலிருப்பதையும் கூறினார். பெரிய போராட்டத்திற்குப்பின் நாயுடுவிற்கு விஷயம் மனதில் பட்டது.

நாயுடு : அது சரி, இப்போ புரிகிறது. என்ன செய்வது?

கணவர் : தவற்றை உணர்ந்து மனத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

நாயுடு : விசேஷம் கடந்துவிட்டதே.

கணவர் : பிரச்சினை உங்களுக்குத்தான், விசேஷத்திற்கில்லை.

இருவரும் வெளியிலிருந்து திரும்ப வந்தால் நாயுடு வீட்டில் 10 பேர்கள் ஆபீஸிலிருந்து வந்து பரிசுகளுடன் காத்திருந்தனர். சிலர் காரணம் கூறி வருத்தப்பட்டனர். மற்றவர்கள் ஒன்றும் பேசாமல் பரிசு கொடுத்தனர். ஒரு சிலர் அன்று வாராமல் பிறகு வருவதற்கு வெட்கப்பட்டனர். பலருக்கு வெட்கமில்லை. பெரிய விசேஷமாய் நாயுடுக்கு மனக்குறை தீரும் வகையில் ஆபீஸ் நண்பர்கள் பெருவாரியாய் வந்தது கணவருக்கு அதிர்ச்சி, ஆச்சரியம். மனைவி, மக்களிடம் இதைக் கூறும்பொழுது அக்கருத்து மனத்தில் ஆழமாய் அவருக்குப் பட்டுவிட்டது.

தாயார் : தான் எனும் அகங்காரம் தடையாக இருக்கிறது.

பெரியவன் : அம்மா, முதலியார் சொன்னது அதுதானே.

கணவர் : அவர் ரொம்ப தவறானவர்.

தாயார் : அவரைப் பணக்காரராகக் கருதுவதால், உலகம் அவரையே மதிக்கும், நம்மையில்லை.

கணவர் : முதலியார் செய்வது அத்தனையும் அனைவருக்கும் சரி. பார்ட்னருக்குத் துரோகம் செய்து வெளியிலனுப்பி நடுத்தெருவில் நிற்க வைத்ததுடன் அவன் கெட்டலைந்து மீண்டும் தன்னிடம் வரவேண்டும் என்பது எவ்வளவு கெட்ட எண்ணம்.

தாயார் : முதலியார் எண்ணம் கெட்டது. பலியானவன் அவனை நாடி வந்துவிட்டானே.

கணவர் : பணம். பணம் எட்டி உதைத்தாலும் கண்ணுக்குத் தெரியாது. உதை இதமாக இருக்கும்.



தாயார் : அந்த மனம் உடையவர்க்கும், கெட்டலையவேண்டும் என்பவர்க்கும் அன்னையில்லை.

கணவர் : நான் அவரைச் சொல்கிறேன். நான் அப்படி நடக்க மாட்டேன். ஆனால் மனம் அப்படியே நினைக்கிறது.

தாயார் : நாம் தவறு செய்து எதிரி பலியானபின் எதிரி கெட்டுப் போய் மீண்டும் நம்மை வந்து கெஞ்சவேண்டும் என்பது மனித சுபாவம், அது மாறவேண்டும்.

கணவர் : எப்படி?

தாயார் : நமக்கு எதிரி, கெட்டது செய்து கெட்டுப்போனாலும் நாம் அப்படி நினைக்கக்கூடாது.

கணவர் : நாம் அவர்கள் - எதிரி - நல்லபடியாக இருக்கவேண்டும் என நினைத்தாலும் நம்மைப் பாதிக்கும் என்கிறாயே.

தாயார் : எதிரிக்கு வாழ்வில் நல்லது செய்வது பெருந்தன்மை.

கணவர் : சூட்சுமத்தில் அதுவும் நம்மைப் பாதிக்குமே.

தாயார் : பாதிக்கும் என்பது உண்மை. அதுவும் மனப்பான்மையைப் பொருத்தது.

கணவர் : அது நாம் பார்த்தோமே. தாம் பொய் சொல்லி, தம் அதிர்ஷ்டத்தை தவறு செய்து அழித்து, பிறகு முன்னுக்கு வர முயலும்பொழுது அரெஸ்ட் வாரண்ட் வந்ததை விலக்கியதும், அவர் சொத்துப் பெற முயன்றதும் என்ன ஆயிற்று? அதே அரெஸ்ட் வாரண்ட் உதவியவருக்கு வந்தது. அதேபோல் சொத்தும் வந்தது.

தாயார் : இரண்டும் அதேபோல் நடந்தன. வந்த அரெஸ்ட் வாரண்ட்டால் அரெஸ்ட் ஆகவில்லை. இருவரும்

அப்படியே. கடன் வாங்கி சொத்து வந்தது. அதுவும் இருவருக்கும் ஒரே மாதிரி.

கணவர் : இவற்றையெல்லாம் பார்த்தால் உடனே மாறவேண்டும் எனத் தோன்றுகிறது. மாறுவது கஷ்டமா?

கணவர் மனமாற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துவிட்டார். இனி மாறுவார் எனத் தாயாருக்குத் தோன்றியது.

தாயார் : அடுத்தவர் வீட்டில் போய் அவ்வளவு நாள் இருந்தது தவறு எனத் தோன்றவில்லை, கோடி ரூபாய் நஷ்டம் வைத்தது, பொறுப்பில்லாமல் வேலையை விட்டுவிட்டு வந்தது, நல்ல பணத்தைக் கறுப்புப் பணமாக்கியது, வம்புக்காரனைத் தூக்கிவிட்டது, ஆபத்தை விலைக்கு வாங்கியது, நல்ல திட்டங்களை நேரடியாக எதிர்த்தது, சம்பாதிக்கத் திறமையில்லாதது, எதுவுமே தப்பாகத் தெரியவில்லை. மீண்டும் அதுபோன்ற காரியங்களைச் செய்ய ஆர்வமாகப் பேசுவதையும் பார்த்தீர்களல்லவா?

கணவர் : இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்தால் என்ன வரும்?

தாயார் : தெம்பில்லாமல் பொறுத்துக்கொண்டால் மீண்டும் வரும். அறிவோடு அர்த்தத்துடன் பொறுத்துக் கொண்டால் அத்தனையும் வரும்.

கணவர் : நீ சொல்பவர் எதையும் சாதிக்கவில்லை.

தாயார் : மற்றவர் எதையும் சாதிக்க விடமாட்டார். சும்மா பேசுவார். சிறிய புத்தி, சின்ன மனம், பொய் சொல்ல மாட்டார். காசு சம்பாதிக்க முடியாது. செலவே செய்ய மாட்டார். எந்தப் பெரிய காரியத்திற்கும் தடையாக இருப்பார், நல்லவர், எதையும் செய்யும் திறமையற்றவர்.



செய்த தவற்றை மீண்டும் செய்வேன் என்பவரை என்ன செய்ய முடியும்?

கணவர் : நீ சொல்பவரை எனக்குத் தெரியும். ரொம்ப நல்லவராயிற்றே. அவரே தேறமாட்டார் எனில் நான் எப்படித் தேறுவேன்?

தாயார் : நல்லவரா, கெட்டவரா என்பதும், தேறுவாரா, தேறமாட்டாரா என்பதும் வேறு. ஒன்று சுபாவம், அடுத்தது முடிவு. தேறவேண்டும் என முடிவு செய்தவர் தேறுவார். சுபாவம் சரியில்லை என்பது வேறு, அதை வலியுறுத்துவது என்பது வேறு. வலியுறுத்தினால் வழியில்லை, வலியுறுத்தினால் வலியுண்டு.

கணவர் : கோர்ட்டிற்குப் போய் ஜெயித்த கேஸை இப்பொழுது கிளறுகிறார்கள் எனில் என்ன செய்வது? தம்பிகட்குப் பங்கு கொடுக்கக் கூடாது என இவர் மனம் நினைக்கும்பொழுது இவர் பங்கை எடுத்துப்போக ஊழல் ஆபீசர்கள் நினைக்கிறார்கள்.

தாயார் : ஊழல் ஆபீசர்கள், இவர் மனத்தின் ஊழலைக் காட்டுகிறது. சூழல் பலமாக இருப்பதால் அந்த ஊழல் ஆபீசர்கள் அனைவரும் மாற்றலாகிப் போய்விட்டனர்.

கணவர் : இரண்டு பக்கமும் சக்தி வேலை செய்கிறது.

தாயார் : நாம் எந்தப் பக்கமிருக்கிறோம் என்பதே கணக்கு. நாம் வறுமையைப் பிரச்சினை என்கிறோம். அது போக செல்வம் வருவதால் ஏராளமான பிரச்சினைகள் உண்டு. குடி மலிவது பணம் பெருகுவதால்தான்.

கணவர் : கொஞ்சமாகக் கொடுத்து அதிகமாகப் பெற நினைப்பதே பிரச்சினைக்கு ஆரம்பம்.

தாயார் : அது அகந்தையில் உள்ளது. பிறரைத் துன்புறுத்தி சந்தோஷப்பட விரும்புபவர், துன்புறுத்த முடியாவிட்டால், துன்பம் அனுபவிக்கிறார். முகம் வாடிப் போகிறது.

கணவர் : அவர் கெட்டவர் என்பது வேறு. ஏன் அப்படி?

தாயார் : சந்தோஷம் நாடுபவர், பெறும் திறன் அற்றவரானால், தம்மால் முடிந்த வகையில் பெற முயல்கிறார்.

கணவர் : எந்த வகை?

தாயார் : பிறரைச் சந்தோஷப்படுத்தி தாம் சந்தோஷம் அனுபவிக்கும் மனமில்லை. பிறரைக் கொடுமைப்படுத்தி சந்தோஷப்படலாம். அதற்குண்டான வலிமையில்லை. ஏமாற்றம் வருத்தம் தருகிறது.

கணவர் : எவரையும் கொட்ட முடியவில்லை என்ற கஷ்டமா?

தாயார் : நம்மால் முடிந்த அளவில் சந்தோஷம் பெற முடியவில்லையே என்ற வருத்தம். மட்டமான - தவறான - மனிதரை இப்படிப்பட்டவர் ஆதரிப்பார்கள்.

கணவர் : ஆமாம். அது ஏன்?

தாயார் : வலிமையற்ற கெட்ட மனிதர், வலுவான கெட்ட மனிதரைப் பார்த்து அவர்கள்போல் தாமிருக்க முடியவில்லையே என வருத்தப்பட்டு, அவர்களை ஆதரிப்பார்கள்.

கணவர் : பார்ப்பதற்கு அது நம்பமுடியாமலிருக்கும்.

தாயார் : அத்துடனில்லை. 10 பேர் மத்தியில், ஆபீசில், பொது இடங்களில் இந்த வலுவானவர்கள் தங்களை ஆதரிப்பவர்களை அவமானப்படுத்துவார்கள். அப்படி



அவமானப்படுத்தினால் அவமானப்படுபவர்கள் சிரித்து மழுப்புவார்கள். அடுத்த நிமிஷம் அவர் பின்னால் போவார்கள்.

கணவர் : இவற்றையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். எனக்குப் புரியவில்லை.

தாயார் : உலகத்து இரகஸ்யம் ஒன்று இங்குண்டு. சிறியது பெரியதை விரும்பி நாடும். அவமானம் பொருட்டன்று. அவமானப்படுத்தினால் பெருமைப்படுவார்கள்.

கணவர் : என்ன பலன் கிடைக்கும்?

தாயார் : அவமானப்படுபவனுக்கு பொக்கிஷம் போன்றது நஷ்டமாகும். இந்த இடத்தில் நஷ்டம் வந்தபிறகும் அவனால் ஏற்கமுடியாது, மாற முடியாது.

கணவர் : நாம் அப்படியிருக்கக் கூடாது. பெரிய இடம் எனில் எல்லாமே தாமே மாறிவிடுகின்றன.

தாயார் : அப்படிப்பட்டவர்க்கு அன்னையில்லை, அடியோடில்லை.

கணவர் : நானும், பிள்ளைகளும் அப்படியிருக்கிறோம். நாங்கள் மாற முயல்கிறோம்.

தாயார் : மாறினால் சமர்ப்பணம் பலிக்கும்.

கணவர் : நீ சமர்ப்பணத்தைப் பற்றிப் பேசினால் எனக்கு கொஞ்சநஞ்சம் புரிந்ததும் போய்விடுகிறது.

தாயார் : பருத்தி புடவையாகக் காய்த்தது, வெட்டிக்கொண்டு வா எனில் கட்டிக்கொண்டு வருவான், எள் என்றால் எண்ணெயாக நிற்கிறான் என்பவை சமர்ப்பணத்திற்குப் பொருந்தும். நாம் ஒரு வேலை செய்கிறோம் என்றால் அந்த வேலைக்குரிய பலன் கிடைப்பது வழக்கம். அந்த

வேலையின் பின்னால் உலகமே இருப்பதால் அந்த உலகம் பலிப்பதும், அதன்பின் பிரம்மமும், பிரம்ம ஜனனமும் இருப்பதால் அவை பலிப்பதும் சமர்ப்பணத்தாலும், சரணாகதியாலும் நடப்பவை. ஒரு ஸ்தாபனத்திற்கு வேலை செய்ய வந்தவர் சமர்ப்பணத்தால் அதன் உச்சிக்கு வருவதும், சரணாகதியால் அந்த ஸ்தாபனத்தையே தனக்குரியது ஆக்கிக்கொள்வதும் சமர்ப்பணம். பிரம்மத்தையும், பிரம்ம ஜனனத்தையும் வெளிப்படுத்துவதாகும்.

கணவர் : இவையெல்லாம் பெரிய விஷயங்கள்.

தாயார் : சமர்ப்பணமும், அன்னையும் பெரிய விஷயங்கள்.

கணவர் : நமக்கில்லை.

தாயார் : இல்லை என்றால் இல்லை, உண்டு என்றால் உண்டு.

கணவர் : தலை சுற்றுகிறது.

தாயார் : நமக்குண்டு, இல்லை என்பது நமக்கில்லை. நமக்கு வேண்டியவை நமக்குண்டு. ஒரு மகசூல் தவறியதால் நிலமே வேண்டாம் என சொல்வது தரித்திரம்.

கணவர் : 85,000 வருமானமானாலும் நீ சொல்லி நான் ஏற்கமாட்டேன் என்பது தரித்திரத்தின் சின்னம். அதுவும் உன்னால் 100 ரூபாய் முழுசாக வசூல் செய்ய முடியவில்லை என்றபொழுது.

தாயார் : நாம் செய்யக் கூடாது, செய்தால் ஒட்டிக்கொள்ளும், தரித்திரத்தின் பாஷையை வரிசையாக எழுதி விலக்க முயலலாம்.

கணவர் : தொடாமலே ஒட்டிக்கொள்ளும்பொழுது எப்படித் தொடுவது?



தாயார் : எந்தச் செயலிலும் அன்னையுள்ளார் என்பதைக் கற்றுக்கொண்டால் போதும்.

கணவர் : வம்புக்காரர்களை வேண்டியவர்களாக நினைத்து வலியப் போய் உதவாமலிருந்தால் தொந்தரவே வாராதோ?

தாயார் : அதில் தேறியாகவேண்டும், கடினம், அவசியம் செய்யவேண்டும்.

கணவர் : பிள்ளைகள் எல்லாம் போய்விட்டார்களே இப்பொழுது எனக்கு விளக்கம் சொல்லேன். Indulgence, enjoyment அழிவு, ஆனந்தம், என்ன தொடர்பு?

தாயார் : மேலிருந்தால் இரண்டும் ஆனந்தம், கீழிருந்தால் இரண்டும் அழிவு. நடுவிலிருந்தால் choice, discipline கட்டுப்பாடு வேண்டும். இதைப் பிள்ளைகட்கே சொல்லலாம். இப்பொழுது சொன்னால் வேட்டை ஆடுவார்கள். மனம் பக்குவப்பட்டால் சொல்லலாம்.

கணவர் : பாக்டரி, கம்பெனியில் நடப்பவை எதுவும் நம்பமுடியவில்லையே. பார்ட்னர் தகப்பனார்போல் இருக்கிறார்.

தாயார் : அவர் முனைந்து அன்னையை ஏற்க முயல்கிறார். நிறைய விஷயங்கள் சொல்லாமல் வைத்திருக்கிறார். சொல்லாதவரை நல்லது. நல்லதை வலியுறுத்துகிறார். அதிர்ஷ்டம், விஷயம், நாம் எங்கிருக்கிறோம் என்பது. Higher consciousness மேலேயிருக்கிறோமா, lower consciousness கீழேயிருக்கிறோமா என்பதே.

கணவர் : சரியாக மறுபடியும் சொல்.

தாயார் : கீழேயுள்ளவர் (lower consciousness) எப்பொழுதும் அடம் பிடிப்பார்கள். அவர்களை வேண்டியவராகக்

கொண்டால் அவர்களுடைய அடம் உங்கள் உடல் நலத்தைப் பாதிக்கும்.

கணவர் : அதுவும் பார்த்தோம். தஞ்சாவூரில் கண்டோம். தமக்கையைவிட முடியாமல் ஆஸ்பத்திரிக்குப் போனார்.

தாயார் : அந்த ஆபத்துகளில் சேரக்கூடாது.

கணவர் : சேராமலிருக்க முடியவில்லையே.

தாயார் : ஆப்பரேஷன்தான் வரும். Nightmare வரும். நல்ல response கொடுத்தால் பூகம்பம் வரும்.

கணவர் : கீழேயிருந்தால் வற்புறுத்தத் தோன்றுமா?

தாயார் : தம்மைப் பெரிய பக்தராக வைத்துக்கொள்வார்.

கணவர் : தொந்தரவு low consciousness இல்லை. அன்னையைத் துணைக்குக்கொள்வதால் என்று சொல்லு.

தாயார் : அதுவே அகங்காரம். அகங்காரம் lower consciousnessதானே.

கணவர் : எனக்கு ஒரு வழி சொல்லேன்.

தாயார் : பார்ட்னர் மாதிரி மனமும், அன்னைமீது பூரண நம்பிக்கையும் இருந்தால் போதும்.

கணவர் : பார்ட்னர் வைரமாயிற்றே, நான் அதுபோல் ஆக முடியுமா?

தாயார் : அவர் பெற்ற அதிர்ஷ்டத்தைக் கொடுத்திருக்கிறாரே, அவர்போல ஆக வேண்டாமா?



கணவர் : அதுவும் சரி. எங்கே ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பது?

தாயார் : ஆசையும், ஆனந்தமும் மனிதனுக்கு முக்கியம். தாழ்ந்தவன் ஆசையை நாடுகிறான். உயர்ந்தவன் ஆனந்தத்தைத் தேடுகிறான். ஒரு நிமிஷம்கூட மனிதன் அனுபவிக்கத் தவறுவதில்லை.

கணவர் : வர வர, அது எனக்குப் புரிகிறது.

தாயார் : அனுபவிப்பதே வாழ்க்கை.

அனுபவிக்காமல் வாழ முடியாது.

பரம்பரையாக அனுபவிப்பது தவறு என்பது கருத்து.

கருத்து எதுவானாலும் நடப்பது அனுபவிப்பதே.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காது என்பது பழமொழி.

The heart never grows old, it grows richer and sincere.

ஸ்ரீ அரவிந்தம் அனுபவிப்பதை ஆமோதிக்கின்றது.

அனுபவிப்பது நல்லதாக உயர்ந்ததாக இருக்கவேண்டும்.

அதிகாரம் செய்வதற்கு அலாதிப் பிரியமுண்டு.

கொடுமை செய்ய விரும்புகிறவர் ஏராளம்.

கேலி செய்வதில் எவரும் விலக்கில்லை.

அன்பாகப் பழகினால் அதிகாரத்தைவிடப் பிரியம் எழும்.

கனிவு இதயத்தை, கொடுமையைவிட நிரப்பும்.

பாராட்டுவது கேலியைவிட ஆனந்தம் தரும்.

கெட்டதைவிட்டு நல்லதிற்கு மாற முடியுமா என்பதே கேள்வி.

அனுபவித்தபடி இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

கணவர் : நாம் நல்ல பழக்கங்களை மனதளவில் ஏற்கவேண்டும். மட்டமான மனிதராக இருக்கக்கூடாது. அதில் பெருமைப்படக் கூடாது என்பதே நீ சொல்வது.

தாயார் : அதை ஏற்பது அதிர்ஷ்டத்தை ஏற்பது. தானே அதை அறிவது self-awareness ஆன்மா தன்னை வாழ்வில் உணர்வது. பார்ட்னரைப் பார்த்து நாம் கற்க வேண்டும். பார்ட்னர் நம்மைப் போற்றுகிறார். அவருக்குள்ள நல்ல குணங்கள் பெரியவை, நினைக்க முடியாது. அன்னை நமக்குப் பார்ட்னராக வந்திருக்கிறார்.

கணவர் : அதுவே சரியா, தெரியவில்லை.

தாயார் : எங்கு அன்னை நேரடியாக வர முடியவில்லையோ, அங்கு அடுத்தவர்மூலம் வருகிறார். தரித்திரம் அப்படி வருபவரைக் கொடுமைப்படுத்தும், தூற்றும், சந்தேகப்படும், துரோகம் செய்யும்.

கணவர் : அன்னையை அறிவது அதிர்ஷ்டம், ஏற்பது அருள், போற்றுவது பேரருள் எனக் கூறலாம் போலிருக்கிறதே.

தாயார் : அன்னை காட்டிக்கொடுக்கவில்லை, ஊட்டிவிடுகிறார். மனிதன் அவர் விரலைக் கடிக்கிறான்.

கணவர் : பிள்ளைகளிடம் வேலை அதிகமாக இருக்கிறது.

தாயார் : வேலை உள்ளேயிருக்கிறது, பிள்ளைகளிடமில்லை.

கணவர் : எனக்கு இப்படித்தான் தோன்றுகிறது எப்பொழுதும்.

தாயார் : படிக்கவேண்டும், சிந்திக்கவேண்டும், நடைமுறையைப் பார்க்கவேண்டும், அன்னையை எல்லா இடங்களிலும் காணவேண்டும், காண்பதை மனம் ஏற்கவேண்டும்.



கணவர் : ஒரு மனிதனைப் பின்பற்றலாம், அன்னையைப் பின்பற்ற முடியாது.

தாயார் : பார்ட்னரை ஏற்றுக்கொள்ளுங்கள்.

கணவர் : பார்ட்னர் உன்னிடம் கற்றுக்கொள்கிறார். நான் உன்னை ஏற்கவேண்டும். மனம் மனைவியை ஏற்க மறுக்கிறது. 85,000 இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்றவர் போலிருக்கிறது. நான் சரியில்லை எனத் தெரிகிறது. மாற மனம் வரவில்லை.

தாயார் : என்னை விடுங்கள், அன்னையைப் பாருங்கள்.

கணவர் : அன்னை எனக்குத் தெரியவில்லை. மனிதரைத் தெரிகிறது.

தாயார் : சரி, போவோம்.

கணவர் : போகவும் மனமில்லை, ஏற்கவும் முடியவில்லை, இதுதான் choice என்பதா? நாம் இப்படியிருந்தால் பிள்ளைகள் எப்படியிருப்பார்கள்?

தாயார் : நாம் செய்வது நமக்கே திரும்பிவருவதை நாம் அறியவில்லை.

கணவர் : தெரியாதது பாதி; தெரிந்தாலும் பொருட்படுத்தாது மீதி.

தாயார் : துரோகம், அலட்சியம், சூன்யம் போன்றவற்றைக் கருதாமல் பண வரவைக் கருதுவோம்.

கணவர் : எதைச் சொல்கிறாய்?

தாயார் : 20 ஆண்டுகள் சேவை, புதுப் பாடமுறையைச் சாதித்தது. பலனைக் கண்டுபிடித்தவர் தங்களுக்குப்

பணம் ஏராளமாக வரக் காத்திருக்கிறது என்று அறியவில்லை.

கணவர் : பணம் வருமா? சேவைக்குப் பணம் வருமா? வசூல் செய்யலாம் என்பதா?

தாயார் : பணம் வரத் தேவையானவை இரண்டு.

1. அடிப்படையான சாதனை.
2. பணத்தைச் சரிவரப் பயன்படுத்துவது.

இவற்றுள் முதற்பகுதியை இவர்கள் சிறப்பாகச் செய்துவிட்டார்கள். இரண்டாம் பகுதியைப் பின்பற்றினால் பணம் சுலபமாக வரும்.

கணவர் : தானே வருமா?

தாயார் : எப்படி வந்தால் என்ன? வரும். தானேயும் வரும்.

கணவர் : என்ன செய்யவேண்டும்?

தாயார் :

1. முதலில் பணம் வரும் என நம்பவேண்டும்.
2. அதன் அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். சாதனைக்குப் பணம் உண்டு என்பது முக்கியம்.
3. கணக்கெழுத வேண்டும்.
4. பணம் வரத் தேவையான சக்தி நம் சேவை விரிவடைவது.
5. விரயம் செய்யக்கூடாது.
6. தாராளமாகச் செலவு செய்யவேண்டும்.
7. வேலையில் ஈடுபாடு அதிகரிக்கவேண்டும்.
8. பணம் உற்பத்தியாகும் இடங்களில் உற்பத்தி செய்யவேண்டும்.



கணவர் : இவையெல்லாம் இவர்கட்குத் தெரியுமா?

தாயார் : தெரியும், முழுவதும் தெரிவது எளிது. அவர்கள் பராமுகமாக இருக்கிறார்கள்.

கணவர் : நாம் ஏன் இதைப் பின்பற்றக் கூடாது?

தாயார் : செய்யலாம். அவர்கள் முதற்பகுதியை முடித்து விட்டார்கள். நாம் அதை இன்னும் செய்யவில்லை.

கணவர் : இப்பொழுது செய்வோம்.

தாயார் : செய்யலாம். தெரிந்ததை முடிப்பது நல்லது.

கணவர் : மனம் முக்கியம்.

தாயார் : மனம் ஏற்று, தெரிந்ததை முடித்தால் ஆரம்பமாகும். பள்ளிக்கூடத்திற்குப் பணம் வந்தது எப்படி என நினைவிருக்கிறதன்றோ?

கணவர் : 3, 4 வருஷங்கள் வேலை நடந்து, அனைவரும் பாராட்டும் நிலைக்கு வந்தபின் அதன் முக்கியஸ்தர் மனத்தால் பெரும்பணம் ஈட்டலாம் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. இப்போராட்டம் 1½ வருஷமாக நடக்கிறது. முக்கியஸ்தருக்குப் பணம் எனில் நன்கொடை.

தாயார் : நன்கொடை என்பது வசூல் செய்வது. நான் சொல்வது பணம் நம்மைத் தேடி வருவது.

கணவர் : அது நீ சொன்னது, நினைவிருக்கிறது. அவர் நன்கொடையை விட்டு நல்லெண்ணத்தை ஏற்கிறேன் என்று ஒரு நாள் வாயால் சொன்னார்.

தாயார் : அடுத்த 10 நிமிஷத்தில் வந்த போன் ஓராண்டிற்குத் தேவையான பணத்தைக் கொண்டு வந்தது.

கணவர் : பள்ளிக்குப் பணமா?

தாயார் : பணம் வந்தது, பள்ளிக்கு என்றதன்று. நாம் பள்ளிக்குத் தரலாம், விசேஷம் மனத்தின் முடிவு. உடனே பெரும் பணம் வருவது நாம் கருதவேண்டியது.

கணவர் : நமக்கு அப்படி நடக்குமா?

தாயார் : பள்ளியைப்போல் சாதனை, முக்கியஸ்தரைப்போல் முடிவு இருந்தால் வருவது சிறியதாக இருக்காது.

கணவர் : ஏன்?

தாயார் : இதுவரை நடந்தது (மனதில்) பெரிய வேலை. பெரிய வேலைக்குப் பெரிய பலன், சிறியதில்லை.

கணவர் : பள்ளிக்கு அப்படியா?

தாயார் : இதுவரை பள்ளியில் செலவு செய்ததற்குச் சமமாக வந்துள்ளது.

கணவர் : அது பெரியது.

தாயார் : பெரியதை எதிர்பார்த்தால் சிறியது வரும். எதிர்பார்க்கக் கூடாது.

கணவர் : என்ன செய்யவேண்டும்?

தாயார் : நாம் மனத்தில் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும்.

கணவர் : அதற்கு அவ்வளவு சக்தியா?

தாயார் : செய்து பார்த்தால் தெரியும். ஒரு வேலை என்று போனால் நாம் என்ன செய்யவேண்டும் என நினைக்கிறோம். பார்க்கப்போனால், யார் நம் வேலையைக் கெடுக்கக்கூடியவர்கள், அவர்களிடம் இருந்து எப்படி நாம் நம்மைக் காப்பது என அறிவது வேலையை விட முக்கியம்.



கணவர் : பொறாமைக்கார எதிரிகளைச் சொல்கிறாயா?

தாயார் : அதிலிருந்து தப்ப முடியாவிட்டால், ஆரம்பிக்க முடியாது. அது அவசியம். நமக்கு எதிரிகள்,

1. **பொறாமைக்காரர்கள்,**
2. **நாம் செய்யும் வேலை சமூகத்தில் யாரை பாதிக்கின்றதோ அவர்கள்,**
3. **நம் வேலை எந்தத் தீய சக்திக்கு ஆபத்தோ அது,**
4. **நமது புதிய ஜீவியத்திற்கு எதிரான பழைய ஜீவியம்.**

கணவர் : இவையெல்லாம் தத்துவங்களாக இருக்கின்றன.

தாயார் : பொறாமைக்காரர் புரியும். நாம் லஞ்சம் கொடுக்காமல் காரியத்தை முடிக்கிறோம். அதனால் லஞ்சம் பெறுபவரால் நமக்கு எதிர்ப்பு வரும். லஞ்சம் தருபவராலும் வரும். நல்ல பொருளை (product) உற்பத்தி செய்கிறோம். தரக்குறைவான பொருளை உற்பத்தி செய்பவர்கள் எதிரிகள். சமூகத்தை ஒட்டிப் போகவில்லை, அதனால் சமூகமே எதிரி. சத்தியத்திற்கு வேலை செய்கிறோம், அதனால் பொய் எதிரி.

கணவர் : உலகமே நமக்கெதிரியானால் எப்படிப் பிழைப்பது?

தாயார் : அன்னை நம் பக்கம். அதை மட்டும் நம்பவேண்டும்.

கணவர் : இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது?

தாயார் : நாம் சரியாக இருக்கிறோம் என்ற பெருமை அவர்களைத் தூண்டும்.

கணவர் : அடக்கம் வேண்டும்.

தாயார் : அடக்கம் அவசியம். அடக்கத்துடன் பொறுமையும், சமர்ப்பணமும் வேண்டும்.

அத்துடன் போன கணவர் 10 நாட்கள்வரை மேற்சொன்னபடி பேச வரவில்லை. வேலையாக இருந்தார். ஒரு நாள் வந்தவர் தம் பழைய நண்பனைச் சந்தித்த விஷயத்தைச் சொன்னார். தம் வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களை நண்பனிடம் கூறியிருக்கிறார். அவனுக்கும் ஓரளவு தெரியும். அவனுக்கு உதவி செய்ய இவர் துடித்துவிட்டார். அவன் கேட்ட உதவி சிறியது, செய்வது எளிது. செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டார். அந்த உதவி இவரை ஆபத்திற்குக் கொண்டு போகும் என இவருக்குத் தெரியவில்லை. அந்த நண்பன் பொதுவாகக் கோள் சொல்பவன். இவர்மீது சொல்லிய கோள் அதிகம். இவருக்கு சில தெரியும், பல தெரியா. தெரிந்தாலும் பொருட்படுத்தமாட்டார். மட்டமானவர்க்கு, கெட்ட எண்ணமுள்ளவர்க்கு, உதவி செய்தால் நம் வேலை கெடும் என அறிவார். இந்த நண்பனுக்குக் கெட்ட எண்ணம் என இவர் மனம் ஏற்காது. தாயார் இதைப் பற்றிப் பேசினால் எடுபடாது. அவர் சட்டப்படிப் பேசக்கூடாது.

கணவர் : பாலு லைசென்ஸ் வாங்க முடியவில்லை என்றான். நான் வாங்கித் தருகிறேன் என்றேன். 2 வருஷமாக நடக்கிறான், பாவம். நீ என்ன சொல்கிறாய்?

தாயார் : சரி, பார்ப்போம்.

கணவர் : ஏன் நான் செய்தது சரியில்லையா? நான் இரண்டு நாளைக்குமுன் பார்ட்னர் தம்பியைப் பார்த்தேன். அவர், ‘‘நமக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்பொழுது இந்தப் பரம வைரி டிபார்ட்மெண்ட் தலைவராக வந்திருக்கிறான்’’ என்றார். அதுவே நமக்கு முக்கியமான டிபார்ட்மெண்ட்.

தாயார் : எப்பொழுதிலிருந்து?

கணவர் : 4 நாட்களாக.

தாயார் : 4 நாட்களுக்குமுன் வீட்டில் எதுவும் விசேஷம் இல்லையே.

கணவர் : கம்பெனியிலும் விசேஷமில்லையே.



பெரியவன் : அப்பா, உங்கள் நண்பரைப் பார்த்தேன். வீட்டிற்கு வரச் சொன்னார்.

கணவர் : உதவி செய்கிறேன் என்றால் வந்து பெற்றுக் கொள்வானா, வீட்டிற்கு வரச் சொல்கிறான். கொஞ்சம்கூட மரியாதையில்லை. இவனுக்கு உதவ நினைத்ததால்தான் எதிரி வந்தானோ?

தாயார் : நேரம் ஒத்து வருகிறதே.

கணவர் : நம்ம லைசென்ஸுக்கு ஆபத்து வருமா? எப்படி இவனிடமிருந்து தப்புவது? செய்தது தப்பு என பிரார்த்தனை செய்கிறேன்.

சிறியவன் : அப்பா, உங்கள் நண்பர் போனில் கோபமாகப் பேசினார். உங்களுக்காக வீணாகக் காத்திருந்தாராம். இனி வரவேண்டாம் எனக் கோபமாகக் கூறிவிட்டார்.

கணவர் : அன்னை பெரிசு, நான் ஆபத்திலிருந்து தப்பினேன்.

தாயார் : இந்த சக்திகள் நமக்கெதிராகப் போய் தாக்குவதைவிட நாமே போய் வம்பை விலைக்கு வாங்குவதே அதிகம்.

கணவர் : இவன் விஷயத்தில் நானேதானே உதவிக்குப் போனேன்.

தாயார் : எதிரி வெளியில் இல்லை, உள்ளே இருக்கிறான். ‘‘பிறர் தர வாரா’’ என்று சங்க இலக்கியம் கூறவில்லையா? பழைய தலைவர்கள், முதலாளிகள், ஆசிரியர்கள், குரு, குடும்பத்தில் பெரியவர்கள், என மனம் இதமாக அவர்களை நாடுவது இயற்கை. அதனால் ஆபத்து வரத் தவறாது.

கணவர் : ESI டைரக்டரால் வந்த தொந்தரவுக்குக் காரணம் அதற்குமுன் அவர் அண்ணனுக்குக் கம்பெனி முதலாளி எழுதிய கடிதம் என்றொருதரம் பேசினோம்.

தாயார் : கம்பர் விழா கொண்டாடுபவரைப் பாராட்டி தமிழ் உரைநடையைப் பற்றி கம்பெனி முதலாளி கடிதம் எழுதினார். அவர் தம்பி 5 வருஷங்கள் கழித்து 1½ இலட்சம் அபராதம் போட்டுவிட்டார். அது கம்பெனி முதலாளிக்குப் புரியுமா? அந்தக் கம்பெனிக்கு வந்த அத்தனைத் தொந்தரவுகளும் முதலாளியே தேடிப் போனவைதாமே.

1. **பழைய முதலாளிக்கு உதவினார், மகசூல் போயிற்று.**
2. **பழைய ஆசிரியருக்குச் சமாதி புஷ்பம் அனுப்பினார், வீட்டு மேல் கேஸ் வந்தது.**
3. **பழைய தலைவருக்கு வீடு இனாம் கொடுக்க நினைத்தார், சொத்து மேல் கேஸ் வந்தது.**
4. **பழைய நண்பனுக்குக் கைமாற்றுக் கொடுத்தார், மானம் போயிற்று.**

கணவர் : இவையெல்லாம் நல்ல குணங்களாயிற்றே.

தாயார் : யோகம் குணங்களைக் கடந்தது.

கணவர் : சமர்ப்பணம் செய்ய முடியாதோ?

தாயார் : சமர்ப்பணம் செய்திருந்தால் இந்த வேலைகளுக்கு எல்லாம் போயிருக்கமாட்டார், கம்பெனி முதலாளி. அவருக்குச் சமர்ப்பணம் தோன்றவில்லை. தோன்றியிருந்தால் முடிந்திருக்காது.

கணவர் : ஏன்?

தாயார் : மனம் செய்யவேண்டும் என்பதைக் கைவிடாமல், எப்படிச் சமர்ப்பணம் பலிக்கும்?

கணவர் : நாம் செய்ய ஆசைப்படுவதைச் சமர்ப்பணம் செய்ய முடியாதோ?



தாயார் : ஆசையை விட்ட பிறகே சமர்ப்பணம்.

கணவர் : ஆசையைச் சமர்ப்பணத்தால் வெல்லலாம் என நினைத்தேன்.

தாயார் : ஆசையை விடுவது நம் வேலை. நம் வேலையை நாமே செய்யவேண்டும்.

கணவர் : ஆசையை விடாமல் சமர்ப்பணம் செய்து பார்த்தால்....

தாயார் : சமர்ப்பணமாகாது.

கணவர் : ஏன்?

தாயார் : அந்தச் சமர்ப்பணம் ஆசையைவிட உதவும்.

கணவர் : புரியவில்லை.

தாயார் : சிந்தனை எழுந்தால் சமர்ப்பணமில்லை. வேலை வந்தவுடன் சமர்ப்பணம் உடன் எழுந்தால் அது பலிக்கும். சிந்தனைக்கோ, உணர்ச்சிக்கோ இடையில் வேலையில்லை. இருந்தால் சமர்ப்பணம் பலிக்காது.

கணவர் : எனக்குச் சமர்ப்பணம் வாராது. பிரார்த்தனை வரும். பிரார்த்தனை பலிக்கும் என்பதால் எனக்குப் பிரார்த்தனை போதும். அன்னை பக்தன் என்பதால் எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்க வேண்டுமல்லவா?

தாயார் : பிரார்த்தனையின் உண்மை பலிக்கும். பர்சனாலிட்டிக்கு ஏற்றவாறு பிரார்த்தனை பலிக்கும்.

கணவர் : அன்னை பலிக்கும் என்பது பொய்யா? நான் ஏமாந்து விட்டேனா?

தாயார் : பொய்யில்லை, ஏமாற்றமில்லை, புரியவேண்டும்.

கணவர் : புரியும்படிச் சொல்லேன்.

தாயார் : சொன்னால் புரியும், நடக்காது.

கணவர் : ஏன்?

தாயார் : சொல்வது புரிவதற்காக, நடத்துவதற்காக அன்று.

கணவர் : நடக்கின்றமாதிரி சொல்ல முடியாதா?

தாயார் : முடியாது, முடிந்தால் ஒரு முறைக்கு மேல் சொல்லக் கூடாது.

கணவர் : அந்த ஒரு முறை சொல்லேன்.

தாயார் : நடந்தவரைக்கும் அப்படிச் சொன்னதுதான்.

கணவர் : ஏன் என் பிரார்த்தனை பலிக்கக்கூடாது?

தாயார் : பிரார்த்தனை என்பது நம் ஜீவனுடைய தேவை.

கணவர் : பலிக்கவேண்டியதுதானே.

தாயார் : ஜீவனுக்கு வேண்டிய அளவில் பலிக்கும்.

கணவர் : அந்த அளவை நிர்ணயிப்பது யார்?

தாயார் : நாம்.

கணவர் : நான் அன்னையைத் தவறாகப் புரிந்துகொண்டேனா? கண்ணாடி போட்டுக்கொண்டால் எழுதப் படிக்கத் தெரியாதவர்க்குப் படிக்கத் தெரியும் என நம்புவதுபோல் புரிந்துகொண்டேனா?

தாயார் : கண்ணாடி கண்ணில் உள்ள கோளாற்றைச் சரி செய்யும். அறிவு தாராது.

*தொடரும்....*

❀❀❀



## அன்பர் கடிதம்

**ஸ்ரீ அரவிந்த அன்னைக்கு அனந்தகோடி நன்றிகள்!**

தங்கள் கடிதப்படி மணிக்கொருமுறை அன்னையின் கண்ணொளி என் கண்ணில் படும்படி பிரார்த்தித்துக்கொண்டேன். நான் சாதாரணமாக நாள்தோறும் எனக்குக் கிடைக்கும் பூக்களைக்கொண்டு அன்னையின் படத்தின்முன் அலங்கரித்து ஊதுபத்தி பற்றவைத்து 108 முறை 'அன்னை சாந்தி' சொல்வேன். பிறகு 'அன்னையின் சித்தம் என் பாக்கியம்', 'அன்னையே உம் திருவருள் நிறைவேறட்டும்', 'ஓம் நமோ பகவதே நம: ஸ்ரீ அரவிந்தாய நம', 'ஸ்ரீ அன்னையே நம' என்று மூன்று முறை சொல்லி, அன்றைய என்னுடைய எல்லாப் பணிகளையும் சமர்ப்பணம் செய்து, பிரார்த்திப்பது வழக்கம். தங்கள் ஆலோசனைப்படி என் பிரார்த்தனைக்கு செவி சாய்த்து அற்புதமாக என் கண்ணின் கோளாறுகளை சரிசெய்து எனக்குப் பூரண ஆரோக்கியமான பார்வையை அன்னை அளித்துவிட்டார். முதலில் கண்ணைப் பரிசோதித்த டாக்டர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார். பின்னர் முதலில் மாத்திரைகளைக் கொடுத்து 1 மாதம் சாப்பிடச் சொன்னார். 1 மாதம் கழித்து, ஸ்கேன் செய்து பார்க்கலாம் என்று கூறினார். என் வேண்டுதலின்படி அறுவை சிகிச்சை இல்லாமலேயே மாத்திரையில் குணமாகிவிட்டது. என்னே அன்னையின் அற்புதம்! அன்னைக்கு நன்றியுடன் காணிக்கை அனுப்பியுள்ளேன். என் பேரன் SSLC தேர்வில் எல்லாப் பாடங்களிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று, பள்ளியின் முதல் மாணவனாக வெற்றி பெற அன்னையிடம் பிரார்த்திக்கிறேன். ஸ்ரீ அன்னைக்கும், தங்களுக்கும் மீண்டும் அனந்த கோடி நன்றி கூறுகிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அருள் நிர்ப்பந்தப்படுத்தாது. நிச்சயமாகச் சுட்டிக்காட்டும். நிர்ப்பந்தப்படும் அருள் உள்ளிருந்து எழுவது; அதை ஆன்மாவின் அருள் என்கிறார்.

## லைப் டிவைன்

கர்மயோகி

# 12. ஆனந்தம் - விளக்கம்

தீமை எப்படிப் படைக்கப்பட்டது என்பதைக் காண்போம். நாம் சத் என்பதை ஆராய்ந்தறிந்தோம். சத் அழியா ஆனந்தமாக அஸ்திவாரத்தில் உள்ளது. அதை விலக்க முடியாது, நமக்குணர்வுண்டு. முடியாது என்பதன்று; உணர்ச்சி மேலெழுந்தவாரியாக வெளியில் உள்ளது. அது மூன்று நிலைகளில் உள்ளது. அவை அனந்த ஜீவனின் ஆழத்து அலைகள். சில சமயங்களில் அவை நுரை. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து தீமை என்ன என நாம் முடிவு செய்யலாம். ஜீவனில் பிரம்மம் அனந்தம். அது பகுக்க முடியாது. அதற்கு உள்ளுறை சக்தியுண்டு. அது அழிக்க முடியாத சக்தி. அது அனந்தம். அது தன்னையறியும் ஜீவனின் சக்தி. தன்னையறிவதற்கும் சக்தியுண்டு. அதை இயற்கை என்றோ, அறிவு என்றோ கூறலாம். அது தன்னைப் பற்றிய ஞானம். அதை ஜீவனின் ஆனந்தம் எனலாம். அது முடிவற்ற ஆனந்தம், அழியாதது. உலகம் ரூபமயமானது. அரூபமும் உண்டு. அகண்டத்தை அறியும் திறனும் உண்டு. அது முடிவற்ற திறன். பகுக்கப்படாத, பகுக்கமுடியாத ஜீவன் அது. தோற்றங்கள் பல. அவை அகண்டம் கண்டமாகப் பகுக்கப்பட்ட தோற்றம். இதுவே சத் எனப்படும் சுயமானது, எல்லாவற்றிலும் உள்ளது. கண்டம் பகுக்கப்படுவது அதன் தன்மை. அது ஆனந்தம். சத்தின் அனுபவம் நிலையானது. அவ்வனுபவம் ஆனந்தமானது. ஜடம் உணர்வற்றது. அதுவும் தோற்றம். ஜடத்தில் தன்னையறியாமலிருப்பது ஆத்மா. ஜடம் தன் பழக்கத்திற்கு அடிமைப்பட்டது. அது ஆழ்ந்த



பழக்கமில்லை. அப்பழக்கமும் சத்தினுடைய ஒரு வகையே. ஜடத்துள் சித்-சக்தி அசையாது, நிலையாக, உள்ளுறைவதை நமது ஆன்மா காண்கிறது. ஜடத்திற்கு உணர்ச்சியில்லை. ஜடத்தினுள் பிரம்மத்தைக் கண்ட ஆன்மா, உணர்வு இல்லாத வாழ்விலும் அதையே காண்கிறது. இதைக் கண்ட ஆன்மா அதனுடன் சுமுகமாக இருக்கிறது. அனந்தமான ஆனந்தத்தை ஆன்மா கண்டது. அவ்வானந்தம் அழிவற்றது, பூரிப்புடையது, அனைத்தையும் தன்னுட்கொண்டது. **இந்த இன்பம் அதன் சொந்த இன்பம். இந்த பிரம்மம் அனைவரிலும் உள்ள பிரம்மம்.** நாம் பிரம்மத்தை அனைவரும் நினைப்பதைப்போல் புரிந்துகொள்கிறோம். இது மேலெழுந்தவாரியானது. நாம் மேல் மனத்தில் விழிப்போடிருக்கிறோம். நாம் அங்கேயே சஞ்சாரம் செய்கிறோம். பிரம்மம் நம் பார்வையிலில்லை. அது நினைவைக் கடந்தது, பெரியது, எல்லா ரூபங்களிலும் உள்ளது இப்பிரம்மம். இன்ப, துன்பங்களிலும் இப்பிரம்மம் உள்ளது. இரண்டு மற்றவற்றிலும் பிரம்மம் உண்டு. ஆத்மா மறைந்திருந்தாலும் ஆழத்திலிருந்து அது செல்வாக்குடன் செயல்படுகிறது. அதுவே பொருள்களை உயிருடனிருக்கச் செய்கிறது. மனிதர்களும், மற்றவையும் வாழ ஆசைப்படுவது இதனால்தான். அதன் ஆட்சிக்கு அனைவரும் உட்பட்டுள்ளனர். விலங்குகள் தன்னிச்சையாகச் செயல்படுவதை நாம் காண்கிறோம். அது பிரம்மம் உணர்வைக் கண்டுகொள்வது. உணர்வு வாழ விரும்புகிறது. ஜடம் அழியாதது. ஜடம் உடலில் பிரம்மம் தன்னைக் காண்பதாகும். அமரத்துவத்தை மனம் உணர்வதும் பிரம்மத்திலிருந்து எழுவதாகும். ரூப வாழ்வில் எல்லாக் கட்டங்களிலும் பிரம்மம் தன்னை வெளிப்படுத்துவதில் நாம் இதைக் காணலாம். தற்கொலை செய்யும் எண்ணத்தை நாமறிவோம். வாழும் வேட்கையின் எதிரான உணர்வு தற்கொலை. அடுத்த நிலைகளை எட்ட பிரம்மம் விரும்பினால், இவ்வுடலிலிருந்து பிரம்மம் விலகும். சத் என்பது ஆனந்தம். வாழ்விலிருப்பதற்குக் காரணம் ஆனந்தம். பிறவியின் முடிவு ஆனந்தம். ஆனந்தம் முடிந்தால் சிருஷ்டி முடிகிறது. உபநிஷதம், ''அனைத்தும் ஆனந்தத்திலிருந்து பிறந்தன.

அவை ஆனந்தத்தால் வாழ்கின்றன. அவை ஆனந்தத்தில் முடிகின்றன’’ என்று கூறுகிறது.

பழைய மதவாதிகள் நெடுநாளாகச் சண்டையிடுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு சட்டம் பேசுகிறார்கள். சத்புருஷனுடைய மூன்று அம்சங்களும் ஒன்றே. இந்நோக்கம் அவர்களை இணைக்கும். இந்த மூன்று அம்சங்களும் பார்வைக்கு வேறு. மனம் அவற்றை மூன்றில் ஒன்றாகக் காண்கிறது. பார்வைக்கே அவை பிரிக்கப்படக்கூடியவை. நிகழ்ச்சிகள் ஜீவியத்தைப் பிரிக்கின்றன, அல்லது பிரிக்கும் தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. உண்மையில் பிரிவினையில்லை. உலகை நாம் தோற்றமாகக் காண்கிறோம். அது மாயையாகத் தோன்றுகிறது. சத்புருஷனுடைய பார்வையில் உலகம் மாயையாகத் தோன்றுகிறது. சத்புருஷன் ஆனந்தம், சலனமற்றது, பகுக்கப்படாதது. மாயைக்கு ஆரம்பத்தில் இந்தப் பொருள் இல்லை. அதற்குரிய பொருள் வேறு. மாயை என்பது அறிவுள்ள ஜீவியம். மாயை உலகைத் தன்னுட்கொண்டது. அனைத்தையும் தழுவவல்லது; அளக்கவும், வரையறுக்கவும்வல்லது. அப்படியானால் மாயை என்பது ரூபம் தரும் ஜீவியம். எல்லையிட்டு, அளந்து, உருவம் கொடுத்து செப்பனிட வல்லது. அறிய முடியாததை அறிய உதவுவது மாயை. அளவற்றதை அளக்க உதவுவது மாயை. அறிவு, திறமை, புத்தி என்பது மாயைக்கு ஆதியில் கொடுத்த அர்த்தம். இப்பொழுது அதற்கு வேறு அர்த்தம். இல்லாதது, திருடு, சூது என்று இப்பொழுது நாம் அதை அறிகிறோம். இத்தவறான பொருளின் ஒரு சாயலை தத்துவங்கள் பயன்படுத்துகின்றன. மந்திரம், மாஜிக், கற்பனை என உலகம் இப்பொழுது மாயையைக் கருதுகிறது.

உலகம் மாயை. உலகம் படைக்கப்படவில்லை என்ற பொருளில் உலகம் மாயையில்லை. உலகம் பிரம்மம் கண்ட கனவு எனலாம். என்றாலும் உலகம் கனவாக பிரம்மத்திலிருக்கும். முடிவாக உலகம் உண்மையானால் உலகம் இன்று பிரம்மத்திலிருக்கும். நிரந்தரமானது இல்லை என்ற பொருளில் உலகம் மாயை எனக் கூற முடியாது.



குறிப்பிட்ட உலகங்கள் மறையலாம். குறிப்பிட்ட ரூபங்கள் மறையலாம். ஜடஉருவமே மறையலாம். சிருஷ்டியிலிருந்து அவை பிரம்மத்திற்குப் போகலாம். தொடர்ந்து நிலையாக இல்லை என்றாலும் தொடர்ந்து மீண்டும், மீண்டும் வருகின்றது. என்றும் அழியாத தன்மையை அவை அடிப்படையிலும், முழுமையிலும் பெற்றுள்ளன. அம்சத்திலும், தோற்றத்திலும் நிரந்தரச் சலனமுடையவை அவை. பிரபஞ்சம் இல்லாத நேரம் இருந்ததா? நமக்குத் தெரியாது. சத்புருஷனுக்கு ஜீவனுடைய லீலை இல்லாத நேரமுண்டா? நாமறியும் உலகம் மட்டுமே இருந்ததா? பிரம்மத்தினின்று எழுந்து, அதிலேயே சங்கமமாகும் நிலையே இருந்ததா? நாமறியோம்.

அனந்தமான சத்தின் அடிப்படையான சத்தியமில்லாததால் உலகம் மாயை எனப்படுகிறது. உலகம் சத்புருஷனுடைய சிருஷ்டி. அது சூன்யத்தில் படைக்கப்படவில்லை. உலகம் சூன்யமன்று, சூன்யத்தில் உற்பத்தியானதன்று. உலகம் அழியாத சத்தியத்தில் அழியாத சத்தியமாக சத்புருஷனிலிருந்து படைக்கப்பட்டது. அதன் ஆதி, உட்பொருள், பொருள் ஆகியவை அடிப்படையானவை, அதுவே சத்தியமான சத். அதன் ரூபங்கள் பிரம்மத்தின் மாறும் ரூபங்கள். உலகம் தன்னை அப்படிக் காண்கிறது. உலகம் தன் சித்-சக்தியால் நிர்ணயிக்கப்படுகிறது. அது சிருஷ்டிக்கும் திறனுடையது. அந்த சக்தி சிருஷ்டியில் வெளிப்படும். மனத்தின் புலன் தவறு செய்யும். அதற்குத் திறமையில்லை. அதனால் மாயை ஏற்படுகிறது. நம் இயலாமையை நாம் கடவுளுக்கோ, அனந்தஜீவியத்திற்கோ கற்பிக்க முடியாது. அப்படிச் செய்வது அடாவடித்தனம். எனவே நாம் உலகை அனந்த ஜீவியத்தின் மாயை எனலாம். அனந்தஜீவியம் மனத்தைக் கடந்தது. மனத்தைவிடப் பெரியது. எனவே அது மாயையைக் கடந்தது. மாயை என்பது பொய். சத்தின் அடிப்படையோ, பொருளோ பொய்யன்று. குறைகளும் தவறும் அகந்தைக்குரியன. அகந்தை பிரிவினைக்குரியது. அதனால் உலகம் பிரம்மத்தின் சத்தியமில்லை என நாம் - அகந்தை - கூறலாம். ஜீவியம் சுதந்திரமானது. அது பெருகும், மாறும். ஆனால்

மேலெழுந்தவாரியானது. அதுவும் கண்டம். ஆகையால் நாம் உலகைத் தோற்றமான உண்மை எனலாம். அடிப்படையான, சலனமற்ற ஐக்கியத்தாலானதன்று உலகம். நம் ஜீவியம் பிரிவினைக்குட்பட்டது. அனந்தஜீவியத்தில் பகுதியில்லை.

உலகை ஜீவியத்தின் நோக்கில் மட்டும் காண்போம். அதிலிருந்து சித்-சக்திக்கு வருவோம். உலகம் சக்தியின் சலனம் எனக் காண்கிறோம். அந்த சக்தி இரகஸ்ய உத்தரவை ஏற்றுச் செயல்படுகிறது. உலகைத் தன்னுடையதாகக் கொண்ட ஜீவியம் உறுதி (will) உடையது. இந்த உறுதி உலகை நடத்துகிறது. உலகம் அவ்வுறுதிக்குப் பணிகிறது. உலகம் பிரகிருதியின் செயல், அது ஒரு செயல்படும் சக்தி. புருஷனைத் திருப்தி செய்ய பிரகிருதி வேலை செய்கிறது. புருஷன் ஜீவன். அது தன்னையறியும். புருஷன் அனுபவிக்கிறது. அது புருஷனுடைய லீலை, பிரகிருதியில் வெளிப்படுகிறது. புருஷன் அச்செயல்களுடன் ஈடுபடுகிறான். உலகம் அன்னையின் திருவிளையாடல். தன்னை அனந்தமான ரூபங்களில் வெளிப்படுத்த அன்னை முயல்கிறார். காலத்தைக் கடந்த அனுபவம் பீறிட்டெழுவதில் அன்னை வெளிப்படுகிறார்.

ஆனந்தத்தின் நோக்கில் உலகைக் காணலாம். சத்புருஷன் காலத்தைக் கடந்தவன். அவனுடைய ஆனந்தம் நம்முள் சுய ஆனந்தமாகிறது. இதையே லீலை என்கிறோம். லீலையை அறிவது சித்தி. குழந்தையின் இன்பம், நடிகனின் இன்பம், கவி அனுபவிக்கும் இன்பம், மெக்கானிக் காணும் இன்பம், அனைத்தும் லீலை. ஆத்மா என்றும் இளமை பூண்டிருப்பதின் இன்பம் லீலை. அது என்றும் உள்ளது, முடிவற்றது. அது சிருஷ்டி, மீண்டும், மீண்டும் தன்னை அவனில் சிருஷ்டிப்பது. தன்னை தனக்கே காண்பிப்பதில் பெறும் ஆனந்தத்திற்காக அது சிருஷ்டிக்கின்றது. அது சுயமான சிருஷ்டி. அவனே லீலை, அவனே ஆட்டம், அவனே அரங்கம். சிருஷ்டிக்குரிய மூன்று சட்டங்கள் இவை. நிலையான அமரத்துவத்துடன் உள்ள



தொடர்பு அவை. சலனமற்ற சச்சிதானந்தம் அவ்வாழ்வு. அவற்றை மாயா, பிரகிருதி, சக்தி என்கிறோம். இந்தியத் தத்துவம் அவற்றை வெவ்வேறாகவும், எதிரானதாகவும் காண்கிறது. உண்மையில் அவை அடுத்தவற்றுடன் சுமுகமானவை. ஒவ்வொன்றும் அடுத்தவற்றுடன் இணைந்தவை. பூரண வாழ்வுக்கு ஒன்று அடுத்ததற்கு இன்றியமையாதது. நாம் உலகின் பகுதி. உலகம் சக்தியின் சலனம். அச்சக்தியை ஊடுருவலாம். மேலெழுந்தவாரியானது தோற்றம். ஜீவியம் பின்னணியில் உள்ளது. ஜீவியத்தின் சலனத்தை நாம் காண்கிறோம். ஜீவியம் தன் அனந்தமான ஜீவியத்தை ஆயிரம் தோற்றங்களில் வெளிப்படுத்துகிறது. இச்சலனம் நடனம். அதன் சாரம், காரணம், இலட்சியம் அனந்தமான ஜீவியத்தின் லீலை. தன்னை ஆயிரமாயிரம் வகையாகத் தனக்கே காண்பிப்பதில் அது முனைந்துள்ளது. மூன்றும் ஒன்றில் உள்ள நிலை. நாம் உலகை அறிய இங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும். பிரச்சினையின் வேர் தெரிகிறது. அழிவற்ற, சலனமற்ற ஜீவனின் ஆனந்தம் சலனம் பெற்று அனந்தமாக மாறும் பிரகிருதியின் இன்பமாகிறது. அவற்றின் பின்னால் அவ்வனுபவங்களை ஆதரிக்கும் முழுமையான சத்புருஷனை நாம் கருதவேண்டும். சத்புருஷனுக்கு நிலையான, விலக்கமுடியாத இன்பமுண்டு. அதன்மூலம் அது தன் ஆதரவைத் தருகிறது. இன்பம், துன்பம், இரண்டுமில்லாதது ஆகிய அனுபவங்களை சத்புருஷன் தன் அசைவுகளால் செயல்படுத்துகிறான். இம்மூன்று நிலைகளும் நம் புலனுணர்வாலான வாழ்வைக் குறிக்கின்றன. அதுவே நம் உண்மையான ஆத்மா. மனத்திற்கு இம்மூன்று நிலைகளும் உண்டு. அது உண்மையான ஆத்மாவின் பிரதிநிதியாகும். உண்மையான ஆத்மா உணர்வான அனுபவம் பெற முன்வருகிறது. நமது ஜீவியம் பகுக்கப்பட்ட பகுதிகளாலானது. அதன் முதல் அலை புலன் அனுபவம். பிரபஞ்சம் ஆயிரம் இடங்களில் நம்மைத் தொடுகின்றது. புலன்கள் அந்த ஸ்பரிசத்தை ஏற்று விருப்பு, வெறுப்பைக் காட்டும் முறை உலகம் என்பது. இது முழுமையான, சிறப்பான பிரதிபலிப்பில்லை. சிக்கலான, முரணான இசையாகும். பிரம்மத்தின் முழுமையைப் பெற

இது முன்னோடி. முழுமையான, தன்னையுணரும் அனுபவத்தை சத்புருஷன் பெறுவதற்கு இது உலகைத் தயார் செய்கிறது. இது உண்மையான வேணுகானமில்லை. உலகின் சிருஷ்டியில் எல்லாம் நாம் ஒன்றான இறைவனை அனுபவித்து உணரலாம். பிரம்மம் பிரபஞ்சத்தில் வெளிப்படுவதில் நாம் இரண்டறக் கலக்கலாம்.

இது சரியான கண்ணோட்டமானால், இதிலிருந்து சில முடிவுகள் எழுகின்றன. ஆழத்தால் நாம் சத்புருஷன், ஏகன். நம் ஜீவனின் சத்தியம், உலகை அறியும் ஜீவியம், பகுக்கப்படாதது. அது ஆனந்தமயமானது. நாம் பகுதியாகவுமிருக்கிறோம், நாம் விழிப்பில் இருக்கும்பொழுது பகுதி மேலேயுள்ளது. வலி, சந்தோஷம், இரண்டுமில்லாதது ஆகியவை மேல்மனத்திற்குரியவை. புலனுக்குரிய வாழ்வு என்பதால், மேலெழுந்தது. அதன் பின்னால் நாம் என்பது உண்டு. அது பரந்தது, உண்மையானது, ஆழ்ந்தது. அதற்கு எல்லா அனுபவங்களும் ஆனந்தமயமானது. பிரகிருதி படபடப்பானது. மனம் வதைந்து வேதனைப்பட்டாலும் தொடருகிறது. இரகஸ்யமான ஆனந்தம் ஆதரவு தருவதால், அதனால் இவ்வவலங்களை அனுபவிக்க முடிகிறது. நாம் என நாம் கூறுவது மேலெழுந்தவாரியான நடுங்கும் கதிர். அதன்பின் அகண்ட பாதாளமும், பரமாத்மாவும் உள்ளன. மேலே உள்ள அனுபவங்களை அவையிரண்டும் அனுபவிக்கின்றன. அவையிரண்டும் நம் புறத்தை கட்டாயப்படுத்துகின்றன. நம் புறவாழ்வு உலகை மென்மையான புலன்களால் ஸ்பரிசிக்கிறது. அது திரைக்குப் பின்னுள்ளது. இத்தொடர்புகளை அது பண்பாக மாற்றிக்கொள்கிறது. அவை உண்மையான, ஆழ்ந்த, படைப்புத்திறனுள்ள அதிகாரமுள்ள அனுபவங்கள். அதன் ஆழத்திலிருந்து அது மேலே வருகிறது. அவை வலிமை, சுபாவம், ஞானம், வேகம் என எழும். நம் பார்வைக்கு அவற்றின் ஆரம்பம் தெரிவதில்லை. நம் மனம் மேலெழுந்தவாரியாக அசைந்து செயல்பட்டு படபடக்கிறது. நம் மனத்திற்கு ஆழத்தில் நிலைக்கும் அனுபவமில்லை.



நம் வாழ்வில் உண்மை ஒளிந்துள்ளது. ஏதோ ஒரு சமயம் லேசாக சத்தியம் தலைகாட்டுகிறது. நாம் எதை சத்தியம் எனக் கருதுகிறோமோ அது பூரணமானதன்று. நாம் உள்ளே போய் வாழலாம். உள்ளேயுள்ள பிரம்மத்தை நாம் உயிருடன் காணலாம். அதுவே நமது உண்மையான ஆத்மா. அது ஆழ்ந்த, செறிந்த, கனத்த ஆத்மாவாகும். அது அமைதியாக, சந்தோஷமாக, சக்திவாய்ந்ததாக உள்ளது. அது உலகத்திற்குட்பட்டதன்று. உள்ளுறை இறைவன் தன் பீடத்தினின்று ஒளி வீசுகிறான். அது பிரம்மமாகவே இல்லாமலிருக்கலாம். அது உள்ளேயுள்ளதை நாம் அறியோம். மேல்மனத்தின் ஆத்மாவை அது ஆதரிக்கிறது, உதவுகிறது. சிறு குழந்தையின் வேகத்தைக் கண்டு நாம் சிரிப்பதைப்போல் அது நம்மைக் கண்டு சிரிக்கிறது. நாம் உள்ளே போய் இறைவனுடன் இரண்டறக் கலக்கலாம். அது உண்மையில் இறைவனின் ஒளி பொருந்திய நிழல். அது மேலெழுந்த அனுபவமில்லை. அதே நிலையில் நாம் உலகத்துடன் உறவாடலாம். நாம் வாழ்விலிருந்தும், மனத்திலிருந்தும் ஒதுங்கி நிற்கலாம். ஒதுங்கி நின்றால் உலகம் நம் அனுபவமாகும். இவை மேலோட்டமானவை என்பதால் நம் சுபாவத்தைத் தொடாது. நம்மை அது வற்புறுத்தாது. சமஸ்கிருதம் திருப்தியான சொல். மனோமயத்தின்பின், அதை ஆனந்தமயம் என்கிறது. அளவோடுள்ள மனத்தின்பின் அது அளவிறந்த ஆனந்தம். மனம் ஆனந்தத்தின் நிழல், சிதறிய சின்னம். நமது சத்தியம் ஆழத்திற்குரியது, மேல்மனத்திற்கன்று.

வலி, ஆனந்தம், நடுநிலைமை ஆகிய மூன்றும் மேலேயுள்ளது. அரைகுறையான நம் பரிணாமம் செய்த ஏற்பாட்டின் பலனது. அதற்கு பிரம்மமுழுமையில்லை, அவசியமுமில்லை. ஸ்பரிசம், வலி அல்லது சந்தோஷம் தரும். இது பழக்கம். வலிபட வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. ஓரிடத்தில் இன்பமும், மற்ற இடத்தில் வலியையும் அனுபவிக்கிறோம். இது நம் சுபாவத்தின் பழக்கம். அனுபவிப்பவர் அனுமதித்த நிரந்தரத் தொடர்பு அது. நாம் நேர் எதிராக நடக்கலாம்.

அது நம்மால் முடியும். வலியுள்ள இடத்தில் நாம் ஆனந்தம் பெறலாம். ஆனந்தத்தை நாம் வலியாக உணரலாம். பரந்த ஆனந்தமயபுருஷன் நம்முள் உள்ளது. நீக்கமற நிகழும் ஆனந்தம் அதன் நிரந்தர அனுபவம். நம் மேல் மனத்தை சுதந்திரமாக உணர நாம் பயிற்றுவிக்கலாம். தற்சமயம்போல் வலிப்பட்டாக வேண்டும், பராமுகமாக இருக்கலாம்; சந்தோஷப்படவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. இது பெருவெற்றி. மேல்மனத்தின் பழக்கத்திலிருந்து விடுபட்டு சந்தோஷமாக உலகை அனுபவிப்பதைவிட இது பெரியது. அது ஆனந்தத்தை சுயமாகப் பெறுவதாகும். உலகுக்கு அடிமைப்பட்டு ஏற்பதுண்டு. அடிமைப்படாமல் உலகை ஏற்பதைவிட இது பெரியது. அனுபவத்தின் குறைகளை சுதந்திரமாக ஏற்பது இது இல்லை. குறையை நிறைவாக்கவும், பொய்யை மெய்யாக்கவும் இதனால் முடியும். மனம் இரட்டைகளையறியும். ஆன்மா ஆனந்தத்தை ஆழத்தில் நிரந்தரமாக உணரும்.

வலியும், ஆனந்தமும் பழக்கத்தால் வந்த தொடர்பு. இதைக் காண்பது சிரமமன்று. நம் நரம்பு மண்டலம் சில நிரந்தரமான பழக்கங்களையறியும். நிகழ்ச்சிகளில் பொய்யின் முழுமையை அது அறியும். வெற்றி, ஜெயம், மரியாதை, மானம், அதிர்ஷ்டம் ஆகியவை சந்தோஷமானவை. சர்க்கரை இனிப்பதைப்போல் அவை சந்தோஷம் தரவேண்டும். தோல்வி, ஏமாற்றம், நஷ்டம், அவமானம், தீமை, தரித்திரம் ஆகியவை விரும்பத்தக்கவையல்ல. விளக்கெண்ணெய் கசப்பதைப்போல் அவை வருத்தம் தரவேண்டும். இந்தச் சட்டம் மாறுவது அதற்கு வழக்கத்திற்கு மாறானது, துர்அதிர்ஷ்டம். நரம்பு பழக்கத்திற்கு அடிமையானது. இயற்கையில் நிரந்தரம் வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடு இது. அனுபவம் மாறக்கூடாது, மனிதனுக்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பு நிலையானது என்பதை ஊர்ஜிதப்படுத்தும் ஏற்பாடு இது. மனம் சுதந்திரமானது, வளைந்து கொடுக்கவும், மாறவும் மனம் தகுந்ததாக இயற்கை ஏற்படுத்தியுள்ளது. முன்னேற்றத்திற்கும், மாற்றத்திற்கும் அது



அவசியம். மனம் தன்னையறியும் அதிகாரி. தானே அடங்கப் பிரியப்பட்டாலொழிய மனம் சுதந்திரமானது. நரம்பின் ஆட்சிக்கு அது உட்பட்டதன்று. தோல்வி, நஷ்டம், அவமானத்தால் மனம் வருத்தப்படவேண்டும் என்ற அவசியமில்லை. தோல்வியைக் கண்டு மனம் சந்தோஷப்படும். அவமானத்தாலும் பூரிப்படைய மனத்தால் முடியும். நரம்புக்கு அடிமையாக மனம் மறுத்தால் மனிதன் சுதந்திரம் பெறுகிறான். நரம்பிலிருந்தும், உடலிலிருந்தும் மனம் விலகினால், அந்த அளவுக்கு மனிதன் சுதந்திரம் பெறுகிறான். உலகத்தின் ஸ்பரிசத்தை தனக்கு மனிதன் இப்படி உட்படுத்திக்கொள்கிறான். அவன் இனி புறத்திற்கு அடிமையில்லை.

உடல் படும் வலி, அனுபவிக்கும் ஆனந்தம் இந்தச் சட்டத்திற்கு எளிதில் உட்படாது. இந்த லோகம் நரம்புக்கும், உடலுக்கும் உரியது என்பதால் உடல் கட்டுப்படாது. புறம், அதன் ஸ்பரிசம், அதன் வலிமை நமக்கு உடலாலும், நரம்பாலும் வருகின்றன. இங்கும் உண்மை தலைகாட்டும். உண்மை இதுவே. எது ஒருவருக்கு வலி தருகிறதோ, அதுவே அவருக்கு இன்பம் தரும் சந்தர்ப்பமாக மாறினால் இந்த மாற்றம் வரும். நிலைமை மாறினால் வலி ஆனந்தமாகும். நாமுள்ள நிலை மாறும்பொழுது இது நிகழும். சில விஷயங்கள் பெரு வேதனை தரும் என்பது உண்டு. தன்னை மறந்த நிலையில் மனிதன் அவ்வேதனையை அறிவதில்லை. சித்ரவதையான வலியை தீவிரமான உணர்ச்சியுள்ளபொழுது மனிதன் உணர்வதில்லை. பல சமயம் நரம்பு தன்னை அறிந்து வலியை நினைவுபடுத்துவதுண்டு. அது வலியை மீண்டும் கொண்டு வரும். இது தவிர்க்க முடியாததன்று, பழக்கத்திற்குரியது. மந்திரவாதியின் மயக்கத்தில் உள்ளவன் காலில் கத்தியால் குத்தினால் அவனுக்கு வலி தெரிவதில்லை. நிலைமை முற்றிலும் மாறுபட்டதால் அவனுக்கு வலிக்கவில்லை. அவன் விழித்தபின் வலி திரும்ப வருவதை மந்திரவாதியால் தடுக்க முடியும். இது ஏன் இப்படி என்பதை சுலபமாக அறியலாம். நாம் விழிப்பில் அறியும் பழக்கம் நரம்பிற்கு அடிமை. மந்திரவாதியால் இப்பழக்கத்தைத்

தடுத்து அடிமனத்தைச் செயல்பட வைக்க முடியும். உள்மனம் நரம்பின் அதிகாரி. அது பிரியப்பட்டால் உடலையும், நரம்பையும் ஆட்சி செய்யும். மந்திரவாதி தரும் சுதந்திரம் பிறர் தருவது. நம்மைப் பொறுத்தவரை அது உண்மையான சுதந்திரமன்று. வேகமாக வந்து, விரைவாக விலகும். நாமே இந்த சுதந்திரத்தைப் பெறலாம். கொஞ்சம், கொஞ்சமாக நமக்கு இது சொந்தமாகும். நரம்பையும், உடலையும் மனம் இவ்வாறு வெல்லும். இதைப் பகுதியாகவோ, முழுமையாகவோ பெறமுடியும்.

உடலும் மனமும் படும் வலி இயற்கைக்குரிய உபாயம். இயற்கை என்பது செயலுக்குரிய சக்தி. பரிணாமம் உயர்ந்து எழுவதில் இயற்கை மாறும் கட்டங்களுக்கு அவசியமானது. நமக்கு உலகம் ஒரு நாடகம். பல்வேறு சக்திகளின் மோதலில் உண்டான சிக்கல் போன்ற சிறப்பு இயற்கை. மனிதன் இந்த அலைகடலின் அற்புத மையம். அவன் சிறியவன், செயற்கையாகச் செப்பனிடப்பட்டவன். அவனுடைய சக்திக்கு அளவுண்டு. அந்த சக்தியின் மீது அதிர்ச்சியான தாக்குதல்கள் அதிகம். மனிதனுடைய செயற்கை அமைப்பை அவை காயப்படுத்தி, ஒடித்து, வெட்டி, சிதறடிக்கின்றன. ஆபத்தான தீண்டுதலினின்று தடுக்கி உடல் தப்பிக்கும் காவியம் வலி. தொந்தரவான தொடர்பிலிருந்தும் மனிதன் பின்வாங்குகிறான். உபநிஷதம் அதை ஜுகூப்ஸா என்கிறது. புறத்திலிருந்து சுயபாதுகாப்பை நாடும் மார்க்கம் வலி. தானில்லை என்பவற்றிலிருந்து சிறியது சுருங்கி விலகும் பாதை வலி. தன்னை ஏற்காதவர், தன்னுடன் சுமுகமில்லாதவரெல்லாம் அதற்குப் பிறராகும். இக்கண்ணோட்டத்தினின்று எதை விலக்க முடியாதோ அதை அனுபவிக்க வேண்டும் என்பது இயற்கை. விலக்க முடியாததனின்று நாம் வெற்றிகரமாக விலகலாம். வாழ்க்கை முன்வாராதவரை அது உடலில் முன்வாராது. அதுவரை ஜடமான முறைகள் பயன்படும். வாழ்வு இயற்கையில் வந்தபின் அது வரும். வாழ்வு பலஹீனமானது, குறையுடையது, அதனால் ஜடத்தைப் பெற முடியாது; பெற்று



ஆளமுடியாது. அது மனம் வாழ்வில் வளரும்பொழுது உடன் வளர்கிறது. மனம் வாழ்விலும், உடலிலும் உள்ளவரை அது வளரும். மனம் வாழ்வையும், உடலையும் பயன்படுத்துகிறது. தான் அறிவு பெற மனம் உடலையும், உணர்வையும் நம்பியுள்ளது. செயலுக்கும் அவற்றையே நம்பியுள்ளது. இத்தடைகள் அகந்தையை வளர்க்கும். மனம் அவற்றால் கட்டுண்டது. மனம் அவற்றினின்று விடுதலை பெறலாம், அகந்தையற்றிருக்கலாம். மனம் மற்ற ஜீவராசிகளுடன் சுமுகமாக வாழலாம். பிரபஞ்சத்துடன் மனம் சுமுகமாக வாழமுடியும். அந்நிலையில் துன்பத்திற்கு இடம் குறைவு. துன்பம் அதிகமாகப் பயன்படாது. அதனால் துன்பம் மறையும். இயற்கையின் பகுதியாகவும், பழக்கத்தாலுமே துன்பம் இருக்க முடியும். துன்பத்திற்கு இனி வேலையில்லை. ஆனால் பழக்கம் நிற்கும். மேல்நிலை ஜீவியம் குறையுடையது என்பதால் தாழ்நிலை ஜீவியம் அதனுள் உயிருடனிருக்கிறது. உரிய நேரத்தில் அதை விலக்க வேண்டும். ஆத்மா ஜடத்தை வெல்லும் பாதை தவிர்க்க முடியாதது. அங்கு இது முக்கியக் கட்டம். ஆத்மா மனத்தின் அகந்தையை அப்படி வெல்லும்.

மனம் அகந்தையை வெல்ல முடியும் என்பதற்குக் காரணம் வலியும், ஆனந்தமும் அனந்தத்தின் இரு ரூபங்கள். ஒன்று குறையானது, அடுத்தது குதர்க்கமானது. ஜீவனின் ஜீவியம் பிளவுபட்டிருப்பதால் இக்குறையும், குதர்க்கமும் எழுகின்றன. மாயை அளந்து, அளவீடு செய்வதால் ஜீவன் பகுக்கப்படுகிறது. மனிதனுக்கு முழுப் பிரபஞ்சமும் உண்டு. அகந்தை வரும் பிரபஞ்சத்தை துண்டு, துண்டாகப் பெறுகிறது. பிரபஞ்சத்தின் உணர்ச்சியை சமஸ்கிருதத்தில் ரஸா என்பர். எல்லாப் பொருள்கட்கும், எல்லா ஸ்பர்சங்களுக்கும் ரஸா உண்டு. பொருள்களின் சத்து, ரஸம், ருசி ஆகியவை ரஸா எனப்படும். சமஸ்கிருதத்தில் அது உயர்ந்த உணர்வைக் குறிக்கும். பொருள்களின் ரஸத்தை நாம் அவற்றின் தொடர்பில் நாடுவதில்லை. நம் பயம், ஆசை ஆகியவற்றை எப்படிப் பொருள்கள் பாதிக்கின்றன என்பதே நமக்குரியது. நமது ஆழ்ந்த ஆசைகளும், மிரட்சியும் எப்படி

பாதிக்கப்படுகின்றன என்பதே நம் கேள்வி. இதனால் ரஸாவை காணும் திறனை நாம் இழந்துவிடுகிறோம். அதனால் ரஸா வலியாகவும், வருத்தமாகவும் மாறுகின்றது. மேலும் குறையான தற்காலிகமான சந்தோஷமாகவோ, உதாசீனமாகவோ ரஸா மாறுகிறது. மனத்தாலும், இதயத்தாலும் நாம் முழுவதும் விலகியிருக்க முடியும். மனம் நரம்புகளை விலகியிருக்க வற்புறுத்த முடியும். அப்படிச் செய்தால் குறையான, குதர்க்கமான ரஸாவின் ரூபங்களைக் கொஞ்சம், கொஞ்சமாக விலக்கலாம். அதன் பின் நீங்காத ஆனந்தத்தின் சாரமான ருசி நமக்கு எட்டும். கலை, காவியத்தில் இதைச் சற்றுக் காண்கிறோம். பிரபஞ்சத்தின் பல்வேறு ஆனந்தம் நமக்குக் கலையுணர்வாக எட்டும். அங்கு வருத்தம், பயங்கரம், சகிக்கமுடியாதது, வெறுப்பானது வெளிவரும். நாம் பற்றற்று விலகியிருப்பதால் நாம் விஷயத்தையும், அதன் சாரத்தையும் காண்கிறோம். நாம் நம்மைப் பற்றியும், நம்மை எப்படிக் காப்பாற்றுவது எனவும் நினைக்கிறோம். கலையுணர்வு சுத்த ஆனந்தமோ அல்லது அதன் தூயரூபமோ இல்லை. தூய ஆனந்தம் சத்திய ஜீவியம், கலையுணர்வைக் கடந்தது. கலையுணர்வும் அதைப் பிரதிபலிக்க முடியாது. வருத்தம், பயங்கரம், கொடுமை மிச்சமாக இருக்கும். சத்திய ஜீவியத்தில் அவை - பயங்கரம், கொடுமை - அனுமதிக்கப்படா. கலையுணர்வு பகுதியாக, குறையாக வளரும் ஆனந்தத்தின் ஒரு நிலையைக் குறிக்கும். இது பிரபஞ்ச ஆத்மா வெளிப்படுவதில் பங்குகொள்ளும். அப்பற்றற்ற நிலையின் சுபாவத்தில் நாம் பகுதியாகப் பங்குகொள்ளலாம். அது அகந்தையின் பற்றறுப்பு. ஓர் ஆத்மா சுமுகத்தையும், அழகையும் காணும். பிரபஞ்ச நோக்கம் அதன் மூலம் வரும். நாம் நம் உலகில் குழப்பமும், சச்சரவும் உள்ளதைக் காண்கிறோம். எல்லாக் கரணங்களிலும் இவ்விடுதலை வந்தால் நமக்கு முழு விடுதலை கிடைக்கும். அது பிரபஞ்சக் கலையுணர்வு, பிரபஞ்ச ஞானம், பிரபஞ்சம் பொருள்களினின்று பற்றற்று விலகி நிற்பது. இருப்பினும் நம் குறுகிய உணர்வு அனைத்தையும் ஓரளவு தழுவும்.



வாழ்வின் ஸ்பரிசத்தின் அதிர்ச்சி தாங்க முடியாததால் துன்பம் எழுகிறது. அதனால் வாழ்வு சுருங்கிக் குறுகுகிறது. எனவே அகந்தையின் குறுகிய அளவு உலகை ஏற்று ஆளும் சக்தியில் ஒரு சலனத்தை ஏற்படுத்துகிறது. நம் உண்மையான ஆத்மாவான சச்சிதானந்தத்தை அகந்தை அறியவில்லை. ஜுகூப்ஸா என்பது சுருங்குவது, குறுகியது. அதை தீதிக்க்ஷா என்பதால் மாற்றினால், அது அதிர்ச்சிகளை வெல்லும். பொறுமையாலும், வெற்றியாலும் நாம் சமத்துவத்தை நாடுகிறோம். இது ஸ்பரிசத்தைப் பராமுகமாகப் புறக்கணிக்கும் அல்லது சந்தோஷமாக அனுபவிக்கும். இந்த சமத்துவம் அகந்தையை அகற்றி அங்கு ஆனந்தமயமான சச்சிதானந்தத்தை வைக்கிறது. அகந்தைக்கு சந்தோஷமும், வலியும் மாறி, மாறி வரும். சச்சிதானந்தத்தில் வலியில்லை. சச்சிதானந்தம் பிரபஞ்சத்தைக் கடந்தது. அது பிரபஞ்சத்துடன் தொடர்புள்ளதன்று. இந்த தூரத்து ஆனந்தத்திற்குப் பராமுகமே பாதை. அது சன்னியாசியின் பாதை. சச்சிதானந்தம் கடந்தது என்பதுடன் பிரபஞ்சத்தையும் கடந்தது. நாம் சரணாகதி மூலம் பிரபஞ்சத்தில் அகந்தையை இழந்து இக்குறிக்கோளை அடையலாம். எங்கும் பரவியுள்ள சமத்துவமான ஆனந்தம் இதன் பலனாக வரும். அது வேதரிஷிகளுடைய பாதை. சந்தோஷம் குறையுடையது, வலி குதர்க்கமானது. இரண்டாலும் தீண்டப்படாமலிருப்பது ஆத்மாவின் சுயகட்டுப்பாட்டில் முதற்படி. சமத்துவமான அனந்தம் அதன் பிறகு கிடைக்கும். மூன்று நிலைகளிலுள்ள வலியை நேரடியாகத் திருவுருமாற்றுவது முடியும். மனிதனுக்கு எளிதன்று.

வேதாந்தம் முழுமை பெற்றால் இதுவே நமது பிரபஞ்ச ஞானம். அனந்தமான, பகுக்கப்படாத சத் அனந்தமயமானது. தன் சுயஜீவியத்தில் அது தூய்மையானது. அடிப்படையான தூய்மையினின்று விலகி சக்தி எனும் ஜீவியத்தின் விளையாட்டான வெளிப்பாட்டில் அது எழும். மாயையின் வெளிப்படான பிரகிருதியின் சலனம் அது. உலகத்தின் ஓட்டமும், பாதையும் பல கட்டங்களில்

செயல்படுகின்றன. முதற்கட்டம் ஜடமான உலகம். அடுத்தாற்போல் உணர்வில் அது எழும். அடுத்தகட்டமான மனம், அகந்தையில் வலி, சந்தோஷம், பராமுகம் எழுகிறது. முடிவாக சச்சிதானந்தம் உலகில் முழுவதும் வெளிப்படும். ஜடத்தில் அனந்தம் கிரகிக்கப்பட்டு, ஜீரணிக்கப்பட்டு, ஜடஉலகில் ஆழ்ந்து மறைந்துள்ளது. அடுத்தாற்போல் பராமுகமான பெருவெள்ளமாக வெளிப்படுகிறது. நாம் அதை உணர்ச்சி எனக் கூறமுடியாது. 3 வகை வலி ஜீவியத்தின் சக்தி அளவுக்குட்படுவதால் எழுகிறது. அது ரூபத்தின் வரையறை. பிரபஞ்ச சக்திகளுடன் மோதுவது சச்சரவை ஏற்படுத்துகிறது. பிரபஞ்சத்தில்தான் சச்சிதானந்தம் முழுவதும் வெளிப்பட்டு பிரகிருதியை வெல்லும்.

ஏன் ஆண்டவன் இந்த மாற்றமான ஓட்டத்தை நாடுகிறான். பதில் சுருக்கமானது. ஆண்டவனின் அனந்தத்தில் எல்லாவிதமான சந்தர்ப்பங்களும் உள்ளன. சத்தின் அனந்தம் சந்தர்ப்பங்களைப் பலவாறு பூர்த்திசெய்வதில் இருக்கிறது. இது அக்ஷர பிரம்மத்திலும், க்ஷர பிரம்மத்திலும் உண்டு. நாம் க்ஷர பிரம்மத்தைப் பற்றிப் பேசுகிறோம். சச்சிதானந்தம் அதன் எதிரானதில் ஒளிந்துள்ள பிரபஞ்சப் பகுதியில் நாம் உள்ளோம். எதிரான வாழ்விலும் சச்சிதானந்தம் தன்னைக் கண்டுபிடிக்க முயல்கிறது. அனந்தமான ஜீவன் ஜடத்தின் தோற்றத்தில் தன்னை இழக்கிறது. அது மனித ஆத்மாவில் எழுகிறது. அனந்த ஜீவியம் ஜடத்தில் தன்னை இழக்கிறது. அது குறுகிய ஜீவியத்தில் மேலெழுந்தவாரியாக எழுகிறது. சக்தி அனந்தமானது, தன்னைத் தான் பாதுகாக்கவல்லது. அது அணுக்களின் குழப்பத்தில் அலை மோதுகிறது. நிலையற்ற உலகில் அது எழுகிறது. அனந்தமான ஆனந்தம் சொரணையற்ற ஜடத்தில் தன்னை இழக்கிறது. பல்வேறு வலியாக அது காணப்படுகிறது. சந்தோஷம், வலி, பராமுகம் என்ற சச்சரவான சலனம் அது. அனந்தமான ஐக்கியம் ஆயிரக்கணக்கான ஜடப்பொருள்களின் குழப்பத்தில் தன்னை இழக்கிறது. இழப்பது தோற்றம். சக்திக்கும்



ஜீவியத்திற்கும் உள்ள பிணக்கே அதன் அரங்கம். ஐக்கியத்தைப் பெற அவை கரைகின்றன, மற்றவற்றை விழுங்குகின்றன. இந்த சிருஷ்டியில் உண்மையான சச்சிதானந்தம் எழ வேண்டும். தனி மனிதன் பிரபஞ்ச ஜீவனாகி வாழவேண்டும். அவனது மனத்தின் ஜீவியம் அளவற்றது. அது பரமாத்மாவின் ஐக்கியத்திற்குத் தன்னை உயர்த்தி உலகைத் தன்னுட்கொள்ள வேண்டும். தனக்கென வாழும் மனிதன் அனைவரையும் அரவணைக்க வேண்டும். உடலின் காம இச்சை பிரபஞ்சத்தின் அன்பாக வேண்டும். அவனது சிறிய வாழ்வு பிரபஞ்சத்தின் மோதல்களைத் தாங்கக்கூடியதாக இருக்கவேண்டும். பிரபஞ்ச ஆனந்தத்தை அனுபவிக்கும் திறனுடையதாக மாற வேண்டும். அவன் உடலும், தான் தனித்தில்லை என அறிய வேண்டும். அனைவர் உடலும் ஒருடல் என்பது தெளிவு பெற வேண்டும். பரமாத்மா முழுமுதற் கடவுள். அதுவே சச்சிதானந்தம். ஒருமைக்குரிய அதற்கு சுமுகமும், ஐக்கியமும் உண்டு. அவனது முழு சுபாவமும் அந்த ஐக்கியத்தையும், சுமுகத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

எல்லாம் லீலை. சத்தின் ஆனந்தமே இங்கு இரகஸ்யமான சத்தியம். மனிதன் பிறக்குமுன் இதே ஆனந்தம் ஆழ்மனத்தின் தூக்கத்திலிருந்தது. எல்லாப் போராட்டங்களிலும், மாறுபாடுகளிலும், ஏற்றத்தாழ்விலும், மாற்றங்களிலும், குதர்க்கங்களிலும், தலைகீழ் மாற்றங்களிலும் இந்த ஆனந்தம் உள்ளது. தனி மனிதன் பரமாத்மாவின் காலம் கடந்த சுயரூபத்தில் மீண்டும் பிறக்க வேண்டும். அவன் முழுமையான சச்சிதானந்தத்துடன் இரண்டறக் கலக்க வேண்டும். இதுவே ஈஸ்வரனின் லீலை, அனைவரிலும் உள்ள பரமாத்மாவின் நாடகம். விடுதலையடைந்து சித்தி பெற்ற ஞானம் இதையறியும். தற்சமயம் ஜடஉலகின் சிந்தனை சிக்கலினுள் நாமிருக்கிறோம்.

❀❀❀

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொஸைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.150 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |
| 9. | ஐம்பது இலட்சம் | சமர்ப்பணன் | ரூ. 50 |
| 10. | $ 100,000 | William Learner | ரூ. 50 |

***சென்னையில் மட்டுமே கிடைக்கும்.**
***தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# சுயநலமான வெற்றி

- ✡ அன்னையிடம் வந்தபின் அனைவருக்கும் வெற்றியுண்டு.
- ✡ நல்லெண்ணம் என்பது பரநலம். அதுள்ளவர்க்குரியது பரநலமான வெற்றி.
- ✡ முழுச் சுயநலம் ( low consciousness ) தாழ்ந்த ஜீவியம்.
- ✡ **சுயநலம் தீவிரமானதால் அதற்குப் பெரு வெற்றியுண்டு.**
- ✡ எது சுயநலம், எது பரநலமான நல்லெண்ணம் என அறிவது எப்படி?
- ✡ சுயநலம் தன்னையறியும்.
- ✡ சுயநலத்திற்கு 99% வெற்றி கிடைக்கும். மீதி 1% மிக முக்கியமான இடமாக இருக்கும். அங்குப் பிரார்த்தனை நகராது. அத்துடன் இந்த 99% வெற்றியை ஈடுகட்டுவதுபோல் ஒருவர் - நமக்கு முக்கியமானவர் - எதிராக, பொய்யாக, கடுமையாக, அசிங்கமாக நடப்பார்.
- ✡ சுயநலத்தின் வெற்றிக்கு எதிரானதுண்டு.
- ✡ நல்லெண்ணம் பரநலமாகயிருந்தால் 100% வெற்றியுண்டு, எதிர்ப்பு இருக்காது.

  ஆனால்,

  சுயநலம் உச்சியை எட்டும்பொழுது பரநலம் அதன் வாழ்வுக்குட்பட்டு வெற்றி பெறும்.
- ✡ சுயநலம் பகுதி, பரநலம் முழுமை.
- ✡ முழுமையான பரநலம் தன் பர்சனாலிட்டிக்குத் தகுந்தவாறு முழுமையான வெற்றி பெறும்.
- ✡ சுயநலமானவர் தம்மைச் சுயநலம் என அறிவது திருவுருமாற்றத்தின் முதற் செயல்.

  சுயநலத்தின் வெளிப்பாடுகள்: பணம் முக்கியம், பிறர் குறை தெரிவது, பிறர் பெருந்தன்மை தெரிய முடியாதது, கடுமை, கொடுமை, அபாண்டப் பொய், அளவுகடந்த சூது, தீராத வாது, தன்னையே ஏமாற்றும் கபடு, திருட்டை உரிமையாக நினைப்பது.

  **சுயநலத்தின் அன்னை படம் கறுப்பாக இருக்கும்;**
  **பக்தியுள்ள இடத்தில் படம் பளிச்சென இருக்கும்.**

❀❀❀

# பிரெஞ்சு தத்துவ மேதை

வால்டேர் என்பவர் புரட்சிகர்த்தா. அவருடைய எழுத்து பிரான்சில் புரட்சியை ஏற்படுத்தியது. ‘‘நீங்கள் இறைவனிடம் என்ன கேட்பீர்கள்?” என்று நண்பர்கள் அவரைக் கேட்டபொழுது,

**“என் விரோதிகளை நான் சமாளித்துக்கொள்கிறேன். என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்”**

என அவர் பதிலிறுத்தார்.

- ➛ **நண்பர்கள் துரோகம் செய்வார்கள் என இதற்குப் பொருளில்லை.**
- ➛ **நண்பர்களை நாம் ஏற்கிறோம், ஆதரிக்கிறோம். எதற்காக நாம் அவர்களை ஆதரிக்கின்றோமோ, அது நமக்குத் துன்பமாய் முடியும்.**
- ➛ **மகன் செய்வதை விட்டுக்கொடுக்க முடியாது என்றால் மகன், குடும்பம் அழியும் காரியங்களைச் செய்வான். மகனை விடமுடியவில்லை என்றால் குடும்பம் அழியும். அதுபோன்றவர்கள் நண்பர்கள்.**
- ➛ **பூரண யோகத்தை ஒருவர் மேற்கொண்டால் அவர் செய்வனவற்றிற்கெல்லாம் எதிராக ஒருவர் evil persona அவரை வந்தடைவார் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**
- ➛ **அப்படி ஒரு நண்பரில்லாவிட்டால் அது நம்முள்ளேயே இருக்கும். அதிலிருந்து தப்ப முடியாது. திருவுருமாற்றத்தை ஏற்காவிட்டால் நாமே நம்மை அழித்துவிடுவோம்.**

❀❀❀